
# தமிழரசு

16.9.1995 ரூ.3





திரு. டி.கே.எஸ். நாடகமன்றம்
"இராசராச சோழன்" நாடகம்

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் - 1995

யாதும் ஊரே யாவரும் கேளிர் !

# கலை நிகழ்ச்சிகளில் சில...

திரு. டி. சங்கரமூர்த்தி -
பஞ்சமுக வாத்தியம்



# இந்த இதழில்...


சொல்லேர் உழவர் நம் அண்ணா
-மாண்புமிகு முதல்வர் ....................................2

ஊனமுற்றோருக்கு ஒவ்வொருவரும் உதவ வேண்டும்
-மாண்புமிகு முதல்வர் உரை ..........................3

படமும் செய்தியும்..........................................9

திராவிடமணி
இரட்டைமலை சீனிவாசன் .........................13

வீரத்தின் விளைநிலம்!
–கவிஞர் இளந்தேவன் ..................................17

இவர்தான் பாரதி!..........................................23

ஆசிரியர் தினம்
–மாண்புமிகு முதல்வர் வாழ்த்துச் செய்தி..........................................24

பெண்ணின் பெருமை-குடும்பம்
–முனைவர் இராம சௌந்தரவல்லி ............26

புதுக்கோட்டை மாவட்டம்
பல்துறைப் பணி விளக்க முகாம் ............33

பெண்களுக்குப் பெரியார்
தந்த சிறப்பு ..................................................36

மலைவாழ் மக்களின்
வாழ்க்கையில் மறுமலர்ச்சி ..........................41

காமராசர் மாவட்டம்
பல்துறைப் பணி விளக்க முகாம் ............43

குற்றாலத்தில்
குதூகலச் சாரல் விழா! ..............................46



தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026

ஆவணித் திங்கள் : 31

மலர்: 26 இதழ்: 6

16.9.1995

விலை ரூபாய்: 3




**இதழ்தோறும் ஓர் இனிய குறள்**

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு (27)

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று சொல்லப்படும் ஐந்தன் வகைகளையும் ஆராய்ந்து அறிய வல்லவனுடைய அறிவில் உள்ளது உலகம்.



# சொல்லேர் உழவர் நம் அண்ணா !

## –மாண்புமிகு முதல்வர்

எந்த மாமனிதரின் காலடிச் சுவடுகளை, நாம் காலம் தோறும் பின்பற்ற வேண்டுமோ, எந்த தவப் புதல்வரின் கருத்துகளை, நாம் காலாகாலத்திற்கும் செயல்படுத்த வேண்டுமோ, அந்த மாமனிதரான பேரறிஞர் அண்ணாவின் பிறந்த பொன்னாளை, இன்று மகிழ்ச்சியோடு கொண்டாடிக் கொண்டிருக் கிறோம்.

இந்த நாள், இன்றைய காலகட்டத்தில், ஒவ்வொரு தமிழனும் தன்னையும், தனது இலக்கையும் அறிந்துகொள்ள வேண்டிய நன்னாள்.

நாம் அறிஞர்களுக்கும், சான்றோர் களுக்கும் இப்படி விழா நடத்துவது, அவர்கள் நினைவைப் போற்றுவதற்காக மட்டுமல்ல, அவர்கள் வகுத்துத் தந்துள்ள பாதையில், நாம் சரியாக நடைபோடு கிறோமா, என்பதைத் தெரிந்துகொள்ளவும் தான்!

சிலர் பிறந்த தாயகத்துக்காக மட்டும் போராடுவார்கள்.

சிலர் பேசும் தாய்மொழிக்காக மட்டும் போராடுவார்கள்.

ஆனால், தாயகத்துக்காகவும், தாய்மொழிக்காகவும், காலமெல்லாம் போராடி, வெற்றிமேல் வெற்றி கண்ட தலைவர்களில், முன்வரிசையில் முன்னணித் தளபதியாய், தளநாயகராய்த் திகழ்பவர், நம் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்.

'வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி வேண்டும்' என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடினார். அந்த எழுச்சியைத் தமிழகத்துக்கு மட்டுமல்ல தமிழுக்கும் உருவாக்கித் தந்தவர் பேரறிஞர் அண்ணா.

'போர் வீரர்கள் செல்வதற்கு முன் பாதை போடுவோர், கரடுமுரடான பாதைகளைச் செப்பனிட்டு, முன்னே செல்வது போல, நம்முடைய எதிர்காலச் சந்ததிகளுக்கு நாம், முள்ளும் கல்லும் புதரும் போல, நம் சமுதாயத்தில் அடைந்துள்ள ஆபாசங் களையும், ஊழல்களையும் அறவே ஒழித்து, நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொடுத்துவிட்டுச் செல்வது, நம்முடைய தலையாய கடமைகளில் ஒன்றாகும்', என ஒரு முறை அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

சமுதாயச் சாலையைச் செப்பனிடுவது ஒன்று, அந்தச் சாலையில் நடைபோடும் போர் வீரனாக விளங்குவது, வேறொன்று, ஆனால், இந்த இரண்டு சாதனைகளின் அருமையான தொகுப்புதான், பேரறிஞர் அண்ணா.

அண்ணா அவர்கள் பாதையை உருவாக்கிய தொண்டர் மட்டுமல்ல அந்தப் பாதையில், ஏறுநடை போடும் வீரர்கள் பலரை உருவாக்கிய தீரர். நல்ல நாற்றங்காலையும் உருவாக்கி, அதில் நல்ல பயிர்களையும் வளர்த்துத் தந்த, சொல்லேர் உழவர் ஆவார் நம் அண்ணா. அவரது இந்த முயற்சிகளின் நன்கொடை தான், இன்று நாம் காண்கின்ற, உலகம் வியந்து பாராட்டுகின்ற தமிழ்ச் சமுதாயம்; இன்று நாம் அமைத் திருக்கும் இந்த அரசு!

–'புரட்சித்தலைவியின் முழக்கம்'
தொகுப்பிலிருந்து



# ஊனமுற்றோருக்கு ஒவ்வொருவரும் உதவ வேண்டும் !

## அனைத்து நாட்டு அறிஞர்கள் தொழில் நுட்ப மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் உரை

**ஊ**னமுற்றோருக்கான உதவி உபகரணங்கள் உற்பத்தி மற்றும் விநியோகிப்பதில் தன்னிறைவு பெறச் சர்வதேச அறிஞர்கள் தொழில்நுட்ப மாநாடு, 5.9.95 அன்று சென்னை 'பார்க் ஷெராட்டன் ஓட்டலில்' தொடங்கியது. இந்த மாநாட்டை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு மத்திய நலத்துறை அமைச்சர் திரு. சீதாராம் கேசரி அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு தமிழக சமூக நலத் துறை அமைச்சர் திருமதி இந்திரகுமாரி அவர்கள் வரவேற்றுப் பேசினார். இந்த மாநாட்டில் உடல் ஊன முற்றோருக்கு உதவும் பயிற்சியாளர்களுக்குச் சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

**'உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுக்காகத் தமிழக அரசு அனைத்து உதவிகளையும் செய்யும்.**

**உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுக்காகத் தமிழக அரசு சில மாதங்களுக்கு முன்பாகக் கொள்கைத் திட்டம் ஒன்றை அறிவித்தது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் முதன்முதலாக இத்தகைய திட்டம் அறிவிக்கப்பட்டது.**

**உடல் ஊனமுற்றோருக்குத் தயாரிக்கும் கருவிகள்- பார்ப்பதற்கு அழகாகவும், பொருத்தமாகவும், விலை குறைவாகவும் இருக்கவேண்டும்'.**

**—மாண்புமிகு முதல்வர்**

## நான்காம் அட்டை சொல்லும் செய்தி

இந்த மாநாட்டில் உலகெங்கிலும் இருந்து 22 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

இந்த மாநாட்டை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்துப் பேசினார். அவர் பேசியதாவது:

மிக முக்கியமான சர்வதேச அறிஞர்கள் தொழில்நுட்ப மாநாட்டைத் தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இத்தகைய மாநாட்டை நடத்த சென்னை நகரைத் தேர்ந்தெடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அயல்நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் வந்திருக்கிறீர்கள். நீங்கள் இங்கு இருக்கும் போது, தமிழ்நாட்டின் கலாச்சாரம், பண்பாட்டைத் தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுக்காகச் சில மாதங்களுக்கு முன்பு மாநில அரசு ஒரு கொள்கைத் திட்டத்தை வகுத்து அறிவித்தது. உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுக்கு ஒருங்கிணைந்த ஒரு திட்டத்தை இந்தியாவிலேயே தமிழக அரசுதான் முதன்முதலில் அறிவித்தது. உடல் ஊனமுறுவதைச் சீக்கிரம் கண்டுபிடிப்பது, அதனைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது, அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதி; வேலைவாய்ப்புப் பயிற்சி, பொருளாதார ரீதியில் அவர்களுக்கு மறுவாழ்வு தருவது போன்ற சேவைகள் என்ற நோக்கத்தில் இந்தக் கொள்கைத் திட்டம் வகுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றும்போது; நிச்சயமாக உடல் ஊனமுற்றவர்கள் இந்தச் சமுதாயத்தில் சொந்தக் காலில் நிற்கமுடியும்.

உடல் ஊனமுற்றோர், கண்பார்வை யற்றோர், கால் அசைக்க முடியாத நிலையில் உள்ளவர்கள், மன வளர்ச்சி குன்றியவர்கள் ஆகியோருக்கு உதவி செய்ய நிதி ஒதுக்குவதில் நாங்கள் தயக்கம் காட்டவில்லை. தேவையான நிதியை ஒதுக்கி வருகிறோம். இதுமட்டுமல்ல, உடல் ஊனமுற்றோருக்குச் சேவை செய்யும் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது.

இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளில் இருந்து நிபுணர்கள் வந்திருக்கிறீர்கள். உங்களுடைய அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொள்வீர்கள். அதன் மூலம் உடல் ஊனமுற்றோர் சந்திக்கும் இடர்ப்பாடுகள், சவால்களுக்கு நல்ல தீர்வுகளை நீங்கள்






காண முடியும்.

ஸ்டீபன் ஹாகின்ஸ் என்ற விஞ்ஞானி பற்றி உங்களில் பலர் தெரிந்திருப்பீர்கள். அந்த விஞ்ஞானி சிறு வயதில் இருந்தே நடக்க முடியாத நிலையில் இருந்தார். எழுத முடியாது. தானே உணவு உட்கொள்ள முடியாது. முன்னால் விழுந்த முகத்தை அவரால் நிமிர்த்த முடியாது. யாராவது ஒருவர்தான் அவரது தலையை நிமிர்த்தி வைக்க வேண்டும். அவர் பேசுவது புரியாது. அப்படிப்பட்டவர், உடல் ஊனமுற்றோருக்கான சக்கர நாற்காலியில் அமர்ந்து கொண்டு சாதனை படைத்தார். கணித மாமேதை ஆனார். உடல் ஊனம் என்பது ஒரு பெரிய விஷயமல்ல என்பது ஸ்டீபன் ஹாகின்ஸ் வாழ்க்கையில் இருந்து தெரிந்து கொள்ளலாம். இன்றைக்கு அவர் நவீன கம்ப்யூட்டர் உபகரணங்களைக் கொண்டு நன்றாகப் பேசுகிறார்.

இன்றைய சூழ்நிலையில் நவீன உபகரணங்களை அனைவருக்கும் தருவது என்பது இயலாத காரியமாகும். இதுபோன்ற நவீன தொழில்நுட்பம், கருவிகள், ஒவ்வொருவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதுதான் நமது நோக்கம். இதுதவிர, அவர்களுக்குள் ஒளிந்து கிடக்கும் திறமைகளையும் வெளிக் கொண்டு வருவது நமது கடமையாகும்.

இசை, கைவினைப் பொருட்களை உருவாக்குதல், ஓவியம் வரைதல் போன்றவைகளில் உடல் ஊனமுற்றவர்கள் திறமைமிக்கவர்களாக இருக்கலாம். அந்தத் திறமைகளை எல்லாம் நாம் வெளிக் கொண்டு வரவேண்டும். இத்தகைய ஊக்கத்தை அவர்களுக்கு அளிப்பது மிகவும் முக்கியம்.

புதிய தொழில் நுட்பத்துடன், உள்ளூரில் கிடைக்கும் பொருட்களை வைத்து- மனித சக்தியை வைத்து கருவிகளைத் தயார் செய்ய வேண்டும். உபகரணம் செய்து கொடுக்கும் போது அவற்றைப் பொருத்துவதற்குப் பயனுள்ளதாக இருக்கும்.

உடல் ஊனமுற்றோருக்கான உபகரணங்களைச் செய்யும்போது, அது அழகாக வும் இருக்க வேண்டும். சிரமப்படக் கூடாது. கருவியை எடுத்தவுடன் எளிதாகப் பொருத்தும்படி இருக்க வேண்டும். அதே சமயத்தில் விலையும் நியாயமாக இருக்க வேண்டும். உதாரணத்துக்குச் சொல்ல வேண்டுமானால், எப்படி மூக்குக் கண்ணாடியையும், பல் செட்டையும் எளிதாக மாட்டுகிறார்களோ, அதேபோன்று உடல் ஊனமுற்றோருக்கான கருவிகளைப் பொருத்துவது எளிதாக இருக்க வேண்டும். விஞ்ஞானத் தொழில் நுட்பம் உடல் ஊனமுற்றோருக்கு நல்வாழ்க்கையைக் கொடுக்கும். இப்போது கம்ப்யூட்டர் உலகம். பிரச்சினைகளைக் கம்ப்யூட்டர் மூலம் தீர்வு காண முடியும். புதிய புதிய தொழில்நுட்பம் வரவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக உடல் ஊனமுற்றோருக்கு நாம் ஒவ்வொருவரும் தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டும்.

இந்த மாநாட்டில் அறிஞர்கள் கலந்து கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்குள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுங்கள். புதிய தீர்வுகளைத் தாருங்கள். உடல் ஊனமுற்றோர் நலனுக்காகத் தமிழக அரசு



## தலைவர் அண்ணா

தமிழ் மொழி, தமிழினம், தமிழ்நாடு என்ற எண்ணங்களையும், அவற்றிற்கான நல்ல தொண்டு பற்றிய நோக்கங்களையும், எல்லோருடைய உள்ளங்களிலும் பல ஆண்டுகளாக விதைத்து வளர்த்த தலைவர் அறிஞர் அண்ணா. தம் பேச்சாலும், எழுத்தாலும் தமிழர் விழிப்புக்காகவும், முற்போக்குக்காகவும் பலவகையாலும் பாடுபட்டு வந்த பெருமகனார் அவர்.

—டாக்டர் மு. வரதராசனார்

அனைத்து உதவிகளையும் செய்ய உறுதி பூண்டுள்ளது. இந்த மாநாட்டில் நீங்கள் நல்ல தீர்வுகளைச் சிபாரிசுகளைத் தாருங்கள். அவைகளை எங்களது கொள்கைத் திட்டத்தில் சேர்த்து, மேலும் சிறந்த முறையில் செயல்படுத்த வழிவகுக்கும்.

–இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசினார்.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களின் அறிவியல் தொழில் நுட்ப ஆலோசகர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள் பேசினார்.**

இந்த மாநாட்டுக்கு, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

"உடல் ஊனமுற்றோருக்கான கருவிகளை மிகுந்த தொழில் நுட்பத்துடன் குறைந்த விலையில் தயாரிக்க வேண்டும். அத்தகைய கருவிகள் எளிதாகப் பொருத்திக் கொள்ளவும் வசதியாக இருக்க வேண்டும்" என்று அந்தச் செய்தியில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூறியிருந்தார்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி இந்திரகுமாரி அவர்கள் வரவேற்றுப் பேசுகையில்-

"உடல் ஊனமுற்றோர் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம். உடல் ஊனமுற்றோருக்கு நல்வாழ்வு அளித்ததில் பல்வேறு விருதுகளையும் பெற்றிருக்கிறோம். உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுக்காக இன்று 10 கோடி ரூபாயை இதுவரை இல்லாத அளவுக்கு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்" என்று குறிப்பிட்டார்.

விழா முடிவில், மத்திய நலத்துறைக் கூடுதல் செயலாளர் நன்றி கூறினார்.

# மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. சீதாராம் கேசரி அவர்கள் பாராட்டு !

**ஊ**னமுற்றோருக்கான உதவி உபகரணங்கள் உற்பத்தி மற்றும் விநியோகிப்பதில் தன்னிறைவு பெற சர்வதேச அறிஞர்கள் தொழில்நுட்ப மாநாடு சென்னையில் நடைபெறுவது மிகவும் பொருத்தமானதாகும். "ஊனமுற்றோர்களுக்காக விரிவான மறுவாழ்வுக் கொள்கையை வகுத்து அதை அதிக அக்கறையோடும், சிரத்தையோடும் மக்கள் ஒத்துழைப்போடு வெற்றிகரமாக அமல் நடுத்திவரும் ஒருசில மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்று", என்று மாண்புமிகு மத்திய நலத்துறை அமைச்சர் திரு சீதாராம் கேசரி அவர்கள் மனம் திறந்து பாராட்டினார்.

"பல்வேறு அலுவல்களுக்கு இடையில், இந்தக் கருத்தரங்கில், கலந்து கொண்டிருப்பதன் மூலம் ஊனமுற்றிருப்பவர்கள் நலனில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு இருக்கும் அக்கறையும், ஆர்வமும் வெளிப்படும்" என்று அவர் குறிப்பிட்டார்.

சென்னையில், 5.9.95 அன்று நடந்த இந்தக் கருத்தரங்கில், மாண்புமிகு மத்திய நலத்துறை அமைச்சர் திரு. சீதாராம் கேசரி அவர்கள் தலைமையுரையாற்றினார்.

"ஊனமுற்றோர் நலவாழ்வு குறித்து சட்டம் ஒன்றை உறுப்பினர் நாடுகள் இயற்றிட வேண்டும் என்பது இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும் முக்கிய விஷயங்களில் ஒன்று. ஊனமுற்றவர்கள் விஷயத்தில் அவர்கள் நலனுக்காக விரிவான




சட்டம் ஒன்றை நாம் நாடாளுமன்றத்தில் ஏற்கெனவே அறிமுகப்படுத்திவிட்டோம் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மனவளர்ச்சி குன்றிய நபர்கள் நல வாழ்வுக்காக அதிகாரப்பூர்வமாகச் சட்ட ரீதியிலான அறக்கட்டளை ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் நாம் தீவிரமாகி இருக்கிறோம்.

பலவிதத்தில் ஊனமுற்றிருக்கும் நபர்களின் நலவாழ்வுக்கென, சென்னையில் தேசியக் கழகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு நிலம் நன்கொடையாகத் தருவதற்குத் தமிழக முதல்வர் அவர்கள் சம்மதித்திருக்கிறார். அவருக்கு இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊனமுற்றோருக்கான உதவி உபகரணங்களை அவற்றில் பெரும்பாலானவற்றை நாம் இறக்குமதி செய்தே வந்தோம். ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டிருக்கிறது. இங்கே ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சியைப் பார்த்தாலே போதும், ஊனமுற்றோருக்கான உதவி உபகரணங்களில் பலவற்றை நாமே உள்நாட்டில் பிரெய்லி சாதனம், காது கேட்கும் கருவி, செயற்கைக்கால்... இப்படி தயாரிப்பதில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

டேராடூனில் பார்வை இழந்தவர்களுக்கான தேசியக் கழகம், அவர்களின் கல்வி மற்றும் மறுவாழ்வுக்கான 50 பொருட்களைத் தயாரித்து வருகிறது. அரசுத்துறை நிறுவனங்கள் மட்டுமில்லாமல், தனியார் நிறுவனங்களும், தொண்டு நிறுவனங்களும் ஊனமுற்றோருக்கான உதவி உபகரணங்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளன.


இந்தக் கருவிகள் ஊனமுற்றவர்கள் வாங்கும் விதத்தில் அவர்கள் கைக்குக் கட்டுப்படியாகும் விலையில் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுதான் இன்றைய அவசியமாகும். இந்நிலையில் அவர்களுக்கு ஏற்படும் அதிகப் பளுவைக் குறைப்பதற்காகத் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்போடு திட்டங்களை வெற்றிகரமாக அமல் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஊனமுற்ற நபர்களுக்கு இதுமாதிரி அரிய சேவை ஆற்றி வருவதற்காக நாட்டில் 550-க்கும் மேலான தொண்டு நிறுவனங்கள் மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெறுகின்றன."

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களின் அறிவியல் துறை ஆலோசகர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் இக்கருத்தரங்கில் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார். இருதய அறுவைச் சிகிச்சைக்குப் பின் பொருத்தப்படும் பேஸ் மேக்கர் கருவி, புற்று நோய்க் கண்டுபிடிப்புத் தானியங்கிக் கருவி, கண் அறுவைச் சிகிச்சைக்குப் பின் பயன்படுத்தப்படும் 'காதேடெர்' ஆகிய உயர் தொழில் நுட்பம் வாய்ந்த மருத்துவ உபகரணங்கள் யாவும் அடுத்த (1996-இல்) ஆண்டில் கட்டுப்படியாகும் விலைக்குக் கிடைக்கும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

இந்தியத் தொழில்நுட்ப நிபுணர்கள், மருத்துவ நிபுணர்கள் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவை வைத்துக்கொண்டு உள்நாட்டிலேயே ஊனமுற்றோருக்கான உதவி உபகரணங்களைத் தயாரிப்பதில் முன்னேற்றம் காணப்பட்டு வந்துள்ளது என்றும், மத்தியப் பாதுகாப்பு அமைச்சகத்தைச் சேர்ந்த ஏவுகணைத் தொழில்நுட்ப நிபுணர்களும் கூட இந்த ஊனமுற்றோருக்கான உயர் தொழில்நுட்ப உபகரணங்கள் தயாரிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# கிசான் விகாஸ் பத்திரம்
# செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்




## சி ற ப் பு அ ம் ச ங் க ள்

- 5 1/2 ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.
- 1.4.95 முதல் தமிழ்நாட்டில் உள்ள அஞ்சலகங்களில் ரூபாய் 1,000/-மும் அதற்கு மேலும் முதலீடு செய்வோருக்கு 2% ஊக்கத்தொகை வழங்கப்படும்.

*மேலும் விவரங்களுக்கு அணுகவும் :*

**ஆணையர், சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.**

**மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், சென்னை – 600 002. தொலைபேசி : 849962.**

**மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,**
**வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.**

**இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,**
**'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.**

**சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்**

சிறுசேமிப்பு – செழுமையின் அடையாளம்.

DIRP/DIS/95




பேரறிஞர் அண்ணா அவர்களின் 87-வது பிறந்தநாளையொட்டி, அண்ணாசாலையிலுள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மாலை அணிவித்தார் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உடன் உள்ளனர். (15.9.95)

# படமும் செய்தியும்

வ.உ.சி. பிறந்தநாளையொட்டி, சென்னைத் துறைமுக வளாகத்தில் அமைந்துள்ள வ.உ.சிதம்பரனார் திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்தனர் (5.9.95).





அமெரிக்க வர்த்தக வளர்ச்சித் திட்டத் துணை அமைச்சர் திரு ரேமாண்ட் விக்கெரி அவர்கள், தலைமைச் செயலகத்தில் 13.9.95 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைச் சந்தித்துப் பேசினார். தமிழ்நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், பல நடவடிக்கைகளை எடுத்துவருவது பாராட்டுக்குரியதாகும் என்று அவர் கூறினார். அப்போது அவர் அமெரிக்காவுக்கு வருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அழைப்பு விடுத்தார்.

அமெரிக்காவைச் சேர்ந்த போர்டு கார் நிறுவனமும், டுபாண்ட் நைலான் நிறுவனமும் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க ஏற்பாடு செய்ததற்காக தனது நன்றியை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் தொழில் நுணுக்கம் வாய்ந்த புதிய ஹைடெக் தொழிற்சாலைகள் ஏற்படுவதற்கு வசதியான சூழ்நிலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கியதற்கும் அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது மற்றொரு அமெரிக்கத் துணை அமைச்சர் திரு ஒமிட்னர், அமெரிக்க வர்த்தக அமைச்சகத்தின் இந்திய விவகார அதிகாரி, அமெரிக்க மின்துறை அமைச்சரின் உதவியாளர் திரு பாப்ரெய்லி வினியார்டு மற்றும் சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதர் திரு டி.பி. ஹவுசர், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.



சென்னையில் நடைபெற்ற ஆசிரியர்கள் தின விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு க. பொன்னுசாமி அவர்கள், டாக்டர் புரட்சித்தலைவி நல்லாசிரியர் விருதினை வழங்கினார். மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர் திரு மு. அம்மமுத்துப் பிள்ளை அவர்கள் உடன் உள்ளார் (5.9.95).

சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் இலவசப் பரிசுக் கூப்பன்களை, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட்டார். அதனைச் சிறுசேமிப்பு ஆலோசனைக் குழுவின் துணைத்தலைவர் டாக்டர் ஜெ. பரந்தாமன், எம்.எல்.ஏ., அவர்கள் பெற்றுக்கொண்டார்.





மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்களின் தலைமையில் நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நில வரி பற்றிய ஆய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில், நடைபெற்றது. இக் கூட்டத்தில், முதன்மை ஆணையர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர் திருமதி லடிகா டி.படல்கர், இ.ஆ.ப., வருவாய்த் துறைச் செயலர் திரு எஸ். மெய்கண்டதேவன், இ.ஆ.ப., நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித்துறை இயக்குநர் திரு எஸ். மணிமாறன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். (12.9.95)

**இருட்டறையில் ஒரு தீபம்:**

மனிதன் ஓர் உண்மையைக் கண்டு பிடித்தான் என்றால், இருட்டறையில் ஒரு தீபத்தை அவன் ஏற்றினான் என்று பொருள்!.

ஆண்கள் மரங்கள்

பெண்கள் அந்த மரத்தை ஆதாரமாக, கொழு கொம்பாகச் சுற்றிப் படரும் கொடிகள்

குழந்தைகள் அந்தக் கொடிகளில் குலுங்கி ஆடும் நறுமண மலர்கள்.

**உழைப்பு:**

இயற்கையின் தடைகளைத் தாண்டினால் தான், மனிதன் முன்னேற முடியும். உழைப்பினாலும், சிந்தனையினாலுமே அது சாத்தியப்படும்.

அனைத்திற்கும் உழைப்பே அஸ்திவாரம், உழைப்பின்றி கடினமான உழைப்பின்றி, முன்னேற்றம் என்பது முடியாத காரியமாகும். -இங்கர்சால்

# ‘திராவிடமணி’ இரட்டைமலை சீனிவாசன்

**–ரகமி**

**“திராவிடமணி” திவான் பகதூர் இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு இந்த ஆண்டு, 135-வது பிறந்த ஆண்டு மட்டுமன்றி, 50-வது நினைவாண்டுமாகிறது. அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இக் கட்டுரை வெளியிடப்படுகிறது!**

**1930**-ஆம் ஆண்டு நவம்பரில் “முதலாவது வட்டமேசை மாநாடு ” இலண்டன் மாநகரில் கூடியது. பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து அம்மாநாட்டிற்கு வந்திருந்தவர்களுக்கு ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் தமது “வின்சர் சாஸ்சல்” என்னும் ராஜ மாளிகைக்குச் சிறப்பு விருந்தளிக்க அழைத்திருந்தார். மாளிகையில் மன்னர் தம்பதியர், வந்திருந்தவர்களைக் கைகுலுக்கி வரவேற்று உபசரித்து, தேநீர் விருந்தும் அளித்தனர். அடுத்து ஓர்முறை ஜார்ஜ் மன்னர் அந்தப் பிரதிநிதிகளிடம், “தீண்டாமை!” என்று கூறுகிறார்களே, அப்படியானால் தீண்டாமை என்றால் என்ன?” என்று கேட்டார்.

இதற்கு அங்கு வந்திருந்தவர்களில் உயரமும், முகத்தில் நல்ல முறுக்கு மீசையோடு தோற்றமுடைய அப்பிரமுகர் மிக்க துணிச்சலோடு, மிகுந்த அர்த்த புஷ்டியான ஆங்கிலத்தில், “மேன்மைதங்கிய மன்னர் பிரானே! “தீண்டாமை” என்பது மேல் சாதியினருக்கும், கீழ் சாதியினருக்கும் ஒன்று சேராத இடைவெளியாகும். இதில் மேல் சாதியினரால் ஒதுக்கப்பட்டவர்களே கீழ் சாதியினர். இவர்களை மேல் சாதியினர் தீண்டவேமாட்டார்கள்!” என்பதற்கான காரணங்களை விளக்கினார். இதனைக் கேட்டதும் வியப்படைந்த ஜார்ஜ் மன்னர், “அப்படியானால் கீழ் சாதியினரில் ஒருவர் திடீரென நடுத்தெருவில் விழுந்துவிட்டால் அப்போது அவனை மேல் சாதியினன் தூக்கிவிட மாட்டானா?” என்றதற்கு அப்பிரமுகரே, “தூக்கியே விட மாட்டான்” என்றார். இதற்கு மன்னர் மேலும் திடுக்கிட்டு, “அன்ன அநியாயம்! எனது ஆட்சியில் அவ்விதம் நடக்க பார்க்கவும் விடமாட்டேன்!” என்றார். அன்று பிரிட்டிஷ் ராஜாங்க ஐந்தாம் ஜார்ஜ் மன்னரிடம் கைகுலுக்கி அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் மன்னரே வியக்கும்படி ஆங்கிலத்தில் பதில் கூறியவர் நம் தமிழகத்தே தாழ்த்தப்பட்டக் குலத்தில் பிறந்த தமிழர்தான் “இரட்டைமலை சீனிவாசன்” ஆவார்.

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டம் கோழியாளம் என்ற கிராமத்தில் 1860-ஆம் ஆண்டு ஜூலை 7-ஆம் நாள் திரு “இரட்டைமலை”, திருமதி ஆதிலட்சுமி தம்பதியருக்குப் பிறந்தவர் “இரட்டைமலை சீனிவாசன்”. இவருக்கு பெற்றோர் இட்டப்பெயர் சீனிவாசன். தன் பெயரோடு தந்தையின் பெயரையும் முழுமையாக இணைத்துக் கொண்டதனால், “இரட்டை



**‘இரட்டைமலை’ சீனிவாசன்**



**இலண்டனில் நடந்த வட்டமேசை மாநாட்டிற்குச் சென்று திரும்பியவர்களுடன் 'இரட்டைமலை' சீனிவாசன். படத்தில் பூமாலை அணிந்திருப்பவர்கள் (இடமிருந்து வலம்) ஏ.டி. பன்னீர்செல்வம், 'இரட்டைமலை' சீனிவாசன், பொப்பிலிராஜா, சர்.ஏ. ராமசாமி முதலியார்.**

மலை சீனிவாசன்'' என்ற பெயரே பிரபலமாகி நிலைத்து விட்டது. இவரது முன்னோர்கள் ''சாம்பவ சந்ததியர்'' எனப் படுவர். ஆதியில் சென்னையில் கிழக்கிந்தியர் ஆட்சிக்காலத்தில் தஞ்சாவூரிலிருந்து வியாபார நிமித்தமாகச் சென்னைப் பட்டிணத்திற்கு வந்ததாக, அவரது வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் கூறுகிறது.

தொடக்கத்தில் இவர் தமது கல்வியை, கோழியாளம் திண்ணைப் பள்ளியில் தொடங்கி, அடுத்து செங்கல்பட்டிலுள்ள ஆரம்பப் பாடசாலையில் சேர்ந்து பயிற்றார். பின்பு கோவையிலிருந்து வந்த உற வினர்கள் மூலம் மேல்படிப் பிற்காக கோவை வாசியானார். அங்கு அவர் படித்தப் பள்ளியில் பெரும்பாலும் உயர்ந்த சாதி மாணவர்களே. அதே பள்ளியில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் என்போர் 3 சதவிகிதமே இருந் தனர். அந்நாளில் சாதிகோட் பாடுகள் மிக்க கொடுமையாக இருந்த காலமாகும். அதனால் மாணவன் ''இரட்டைமலை சீனிவாசன்'' இதர மாணவர் களுடன் பழகினால் தனது சாதி, குடும்பம் இவைகளைப் பற்றி அறிய நேரிட்டால், அம்மாண வர்கள் தன்னைப் பற்றித் தாழ் வாக எண்ணக் கூடும் என்ற கவலையால் அன்றாடம் பள்ளிக்கு, ஆரம்ப மணி அடித்த பின்னரே வகுப்பிற்கு வருவதும், பள்ளி விட்டதுமே, எல்லா மாணவர்களைவிட, தானே வகுப்பை விட்டு வேகமாக வெளியேறி ஓடிச் சென்று விடுவாராம். அதோடு சக மாணவர்களோடு சேர்ந்து விளையாட முடியாத கொடுமை யினால், அந்த மாணவனின் பிஞ்சுமனம் ஏங்கியது.

படிப்பின் முழுத்திறமையால் மாணவன் இரட்டைமலை சீனிவாசன் கோயம்புத்தூரில் கல்லூரி மாணவராக இருந்த போதே **1887**-ஆம் ஆண்டு தமது **27**-ஆம் வயதில் அரங்கநாயகி என்பவரைத் திருமணம் புரிந்தார். பின்பு அவர் நீலகிரியிலேயே, ஓர் ஐரோப்பிய வியாபார நிறுவனத் தில் கணக்காயராக சுமார் பத்து ஆண்டுகள் பணியாற்றினார். இக்காலத்திலும் இரட்டைமலை சீனிவாசன் மனதில் இந்தத் தீண்டாமையை எப்படி ஒழிப்பது? என்பதே பெரும் கவலையாகவே சூழ்ந்து கொண்டது.

இலண்டன் மாநகருக்குச் சென்று தாழ்த்தப்பட்டோர் இடுக்கண்களை பிரிட்டிஷ் அரசாங்கத்தாரிடம் அனுதாபத் தைப் பெற பம்பாயிலிருந்து கப்பல் மார்க்கமாக சென்றவர் சிறிது காலம் கீழ் ஆப்பிரிக் காவைச் சேர்ந்த ஜான்சி பாரிலும் தங்கியவர், பின்பு தென்னாப்பிரிக்காவுக்குச் சென் றார். அங்கு 'நெட்டா'வில் தங்கி அங்கு நீதிமன்றத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றி வந்ததோடு, அங்கு காந்தியடிகள் வழக்கறிஞராகப் பணியாற்றி வருகையில், அவருக்கு மொழிப் பெயர்ப்பாளராக இருந்ததோடு, அவருக்குத் தமிழ் மொழியையும், அவர் தமது பெயரை 'மோ.க. காந்தி' என எழுதக் கற்றுத் தந்தவரும் இவரே!

**1921**-இல் சென்னைக்குத் திரும்பிய 'இரட்டைமலை' சீனிவாசன் மீண்டும் அரசியலில் பங்குகொள்ள அந்நாளில் பிரபல கட்சியாக விளங்கிய

'நீதிக்கட்சி' (ஜஸ்டிஸ் பார்ட்டியில்) இணைந்து செயல்படத் தொடங்கினார். 1923-ஆம் ஆண்டிலிருந்து 1938-ஆம் ஆண்டு வரையில் சென்னை மேல்சபைக்கு நியமன உறுப்பினராகப் பணியாற்றினார். 1924-ஆம் ஆண்டு ஆகஸ்டு 25-ந் தேதி சட்டசபை கூடியபோது 'இரட்டைமலை' சீனிவாசன் அவர்கள் தாழ்த்தப்பட்ட சமூக மக்கள், இதர எல்லாப் பொது மக்களுக்கும் சமமாகப் பொதுச்சாலைகளில் நடக்கவும். பொதுக் கிணறுகளில் நீர் எடுக்கவும், மற்றும் சில தீர்மானங்களைக் கொண்டுவந்ததை அரசு ஏற்றுக்கொண்டு இதற்கான தனிச் சிறப்பு அறிக்கை, அரசாங்க கெசட்டிலும் பதிவாகியது.

தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றங்களுக்காகப் பல வழிகளில் அயராது பாடுபட்டு உழைத்துவந்த காரணத்தினால் பிரிட்டிஷ் அரசாங்கம் இவருக்கு 1926-ஆம் ஆண்டு பிப்ரவரி 20ந் தேதி 'ராவ் சாகிப்' என்ற சிறப்புப் பட்டத்தையும் அளித்து கௌரவித்தது. தாழ்த்தப்பட்ட இன மாணவர்களின் கல்விக்காக இவர் 'தாழ்த்தப்பட்டோர் கல்விக் கழகம்' என்பதைனத் தொடங்கி அதுவே படிப் படியாக வளர்ந்து, 'சென்னை மாகாண ஷெட்யூல்டு கிளாஸ் பெடரேஷன்' என்ற பெயரோடு சிறப்புற்றது.

வாழ்க்கையில் இவருடன் பொதுத் தொண்டிலும், தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றம் அடைய, கணவனோடு இணைந்து உழைத்த அவரது மனைவி திருமதி அரங்கநாயகி அம்மாள் 1928-ஆம் ஆண்டு பிப்ரவரி 4-ந் தேதி காலமானார். அந்த அம்மையாரின் சடலம் சென்னை ஓட்டேரி மயானப் பூமியில் நல்லடக்கம் செய்யப் பட்டது. மனைவியை இழந்த துயரம் மிகுந்திருந்த போதிலும், அவர் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக வாதாட 1930-ஆம் ஆண்டு இலண்டனில் நடந்த 'முதலாவது வட்ட மேசை மாநாட்டில்' கலந்துகொள்ள இந்தியாவிலிருந்து சென்ற பிரமுகர்களில் டாக்டர் அம்பேத்கர், ஏ.டி. பன்னீர் செல்வம், ஆகாகான், மகம்மது உஸ்மான் சாகிப், 'ஆற்காடு பிரமுகர்' ஏ. இராமசாமி முதலியார், ஏ.பி. பாத்ரோ மற்றும் பலருடன் 'இரட்டை மலை' சீனிவாசன் அவர்களும் மிகப் பிரபலமானவரே.

'முதல் வட்ட மேசை மாநாட்டில்' 'இரட்டைமலை' சீனிவாசன் தாழ்த்தப்பட்ட சமூக மக்களுக்கு அரசியலில் அதிகாரம் வழங்கினால்தான் 'தீண்டாமை' என்ற கொடி நோய் ஒழிந்துபோகும், அதோடு வயது வந்தோர் அனைவருக்கும் பொதுத் தேர்தலில் வாக்குரிமை வழங்கவேண்டும், சட்டசபையில் ஆதிதிராவிட மக்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் அளித்தால் தான் அவர்களது வாழ்க்கையும் முன்னேற்றம் அடையும்!' என ஆணித்தரமாக உரையாற்றினார். ஏற்கெனவே இவருக்கு 'ராவ் சாகிப்' கௌரவப் பட்டம் அளித்த அதே பிரிட்டிஷ் அரசாங்கம் இவருக்கு 1931-ஆம் ஆண்டு 'ராவ் பகதூர்' பட்டமும் அளித்து மேலும் சிறப்பித்தது.

டாக்டர் அம்பேத்கர் அவருக்கு தென்னிந்தியத் தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றிய சரியான விவரங்களைச் சேகரித்து அவைகளைத் தனக்குத் தானே முறைப்படி பரிசீலித்து அதனை அவருக்குக் கொடுத்துதவினார். தென்னிந்திய தாழ்த்தப்பட்ட இன மக்களைப் பற்றி டாக்டர் அம்பேத்கர் தகுந்த ஆதாரங்களோடு பேசுவதற்கு மூல காரணகர்த்தாவாக விளங்கியவர், 'இரட்டைமலை' சீனிவாசன் அவர்களே ஆவார். ஆனால், டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களைப் புத்த மதத்திற்கு மாறவேண்டும் என்று பிரசாரம் செய்ததை மிக்க பலமாக எதிர்த்துக் கண்டித்தவரும் 'இரட்டைமலை' சீனிவாசனே ஆவார்! இதனால் இவர்கள் இருவருக்குமே கருத்து வேறுபாடுகளும் ஏற்பட்டது. இது விஷயமாக இவர்கள் இருவருக்கும் சமரசம் செய்ய வந்தவர்களிடம் 'இரட்டைமலை' சீனிவாசன் "நான் ஒரு இந்தியன்! இந்து மதத்தின் கலாச்சாரப் பெருமைகளையும் கூறும் தென்னகத்துத் 'தமிழனாக' இருக்கவே விரும்புகிறேன். மற்ற மதங்கள் அவசியமில்லாதது!' என வாதாடியவர் தனது வாழ்நாள் முழுவதும் அதையே கடைப்பிடித்து வந்தார்.

இவரது சீரிய பணியைப்

---

**திடமான எண்ணத்தைவிட, அருமையான குணம் வேறொன்றுமில்லை.**

**–தியோடர் ரூசுவெல்ட்**

---

பாராட்டி அரசு இவருக்கு 1936 ஜனவரிப் புத்தாண்டுத் தினத்தில் 'திவான் பகதூர்' கௌரவப் பட்டமும் அளித்து சிறப்பித்தது. 1937-இல் தமிழகத்தில் நடந்த பொதுத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் ஓர் இணைக் கட்சி யான 'சுயராஜ்யக் கட்சிக்கும்', 'ஜஸ்டிஸ் கட்சி' என்ற நீதிக் கட்சிக்கும் கடும் போட்டியாக இருந்து இறுதியில் சுயராஜ்ஜியக் கட்சியே பெரும் வெற்றி பெற்றுத் தமிழகத்தில் முதன்முறையாக ஆட்சியை அமைத்தது. அப் போது சென்னை மாகாணத்தின் மந்திரிசபைக்கு இராஜாஜி அவர்களே 'பிரீமிய'ராகப் பதவி ஏற்றார். அந்நாளில் தமிழக முதலமைச்சருக்குப் 'பிரீமியர்' அல்லது 'பிரைம் மினிஸ்டர்' என்ற பெயரும் இருந்தன. சென்னை மாகாண முதலமைச் சராக இராஜாஜி இருந்தபோது, 'இரட்டைமலை' சீனிவாசன் 'ஜமீன்தார்களின் நிலங்களைக் கைப்பற்றி ஜமீன் ஒழிப்பு' செய்வதோடு, கைப்பற்றிய நிலங்களை உழவர்களுக்கு வழங்க வேண்டும்!' என்று வாதாடினார்.

அந்நாளில் ஆதிதிராவிட மக்களின் நலனுக்காகப் பாடு பட்டு வரும் 'இரட்டைமலை' சீனிவாசனின் சேவையை மேலும் பாராட்டும் வகையில் 'தமிழ்த்தென்றல்' என்றழைக்கும் திரு.வி.க. அவர்கள் 'திராவிட மணி' என்ற பட்டமும் வழங்க ஓர் விழாவிற்கும் ஏற்பாடா கியது. அந்த விழாவிற்கு தமிழகப் பிரீமியர் இராஜாஜியும் கலந்துகொண்டார். தமது பாராட்டில் இராஜாஜி அவர்கள் '... அரசியலில் நாங்கள் இருவரும் வெவ்வேறு கட்சியாக இருப் பினும், தாழ்த்தப்பட்ட மக்கள் நலனில் எங்கள் இருவருடைய கொள்கையும் ஒன்றுதான். 'திராவிடமணி' என்ற பட்டத் திற்கு இவரே மிக பொருத்த மானவர்! திருப்பதியில் ஏழுமலைகளைக் கடந்து சென்று அந்த 'சீனிவாசனை'த் தரிசிக் கலாம்! ஆனால் இந்த புனிதமான தமிழகம்பதியிலே 'இரட்டைமலை'யிலேயே நம் சீனிவாசனைச் சுலபமாகக் காணலாம். நமக்கு ஐந்துமலைத் தூரம் நடை மிச்சம்!' என்றதுமே அந்த விழாவில் எழுந்த கர வொலி எங்கும் எதிரொலித் தனவாம்!.

சிறிது காலம் சென்னையை அடுத்த பூந்தமல்லியில் வசித்து வந்த, 'இரட்டைமலை' சீனிவாசன், சென்னையில் பார்க்டவுன் என்றழைக்கும் பகுதியில் பெரியமேட்டிற்கு வந்து வசிக்கலானார். இங்கு வீரபத்திரன் தெருவில் 4-ஆம் எண்ணுள்ள இல்லத்தில் வசித்துவந்தார். சிறிது காலம் உடல்நலமின்றி தீவிரச் சிகிச்சைகள் அளித்தும் எவ்வித பயனுமளிக்காத காரணத் தினால் 1945-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ந் தேதி செவ்வாய்க்கிழமை கால மானார். அப்போது அவருக்கு வயது 85. சென்னை ஓட்டேரி மயானத்தில் அவரது அன்பு மனைவியின் கல்லறைக்கு அருகிலேயே 'தீண்டாமை ஒழிப்பதை' இலட்சியமாகக் கொண்ட 'தாழ்த்தப்பட்ட மக்களின் திலகம்' என போற்றும் 'இரட்டைமலை' சீனிவாசனின் உடலும் நல்லடக்கம் செய்யப் பட்டு இன்றோடு 50 ஆண்டுகள் கடந்துவிட்டன.

---



**ஆழ்ந்த மனிதாபிமானி!**

**எளிய வழிமுறைகள், தூய்மையான சிந்தனைகள், எல்லோரிடத்தும் பரிவு - அண்ணாவின் இம்மூன்று தன்மைகளும் அவர்பால் என்னை ஈர்த்தன. அவர் நிதானமிக்கவர்; ஆழ்ந்த மனிதாபிமானி.**

*—டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார்*

# வீரத்தின் விளைநிலம்! வெற்றியின் திருவுரு! பாடுவோம் எங்கள் பைந்தமிழ்த் தாயின் புகழ்!

**—கவிஞர் இளந்தேவன்**

தென்றலுக்கு மென்மைதனைச் சொல்லித் தந்து,
தேன்மலர்க்கு நறுமணத்தைக் கற்றுத் தந்து,
அன்றிலுக்குக் காதல்மனப் பாங்கைச் சொல்லி,
அரவிந்த மலருக்குச் செம்மை தந்து,
முன்றிலிலே விளையாடும் குழந்தை கட்கு
முத்தமிழைச் சுவைக்கின்ற பயிற்சி தந்தாய்,
என்றைக்கும் இளையவள்நீ தமிழே, உன்னை
எண்ணுபவர்க்கு எந்நாளும் முதுமை யில்லை,

தீப்புனலில் நீராடும் கவிதை நெஞ்சத்
திறம்எனக்குத் தந்துவிடு தமிழே, உன்னைப்
பாப்புனலில் நீராட்டி மகிழ்வேன் யார்க்கும்
பதில்உதவி நான்செய்யா திருந்த தில்லை.
வாய்ப்புனலே காளத்தி யப்ப ருக்கு
வழிபாடாய் அமைந்ததை நீ அறிவாய் இந்தச்
சேய்ப்பறவை சிற்றலகில் கவ்வி வந்த
சிறுமலரை நீமறுக்க நியாய மில்லை.

போதையிலே சிலருக்குக் கவிதை தோன்றும்.
பொடிமட்டையால்சிலர்க்குக் கவிதை தோன்றும்,
பாதையிலே தேர்போன்ற பாவை மார்கள்
பவனிவரப் பலருக்குக் கவிதை தோன்றும்.
வாதையிலே சிலருக்குக் கவிதை தோன்றும்,
வார்த்தையுடன் போராடிக் கவிதை தோன்றும்
ஏதுபொருள் தரஎனக்குக் கவிதை தோன்றும்?
இனிப்பொன்றைத் தந்துவிட்டால் கவிதை தோன்றும்!

**(வேறு)**

அந்த-
இனிக்கும் இளமைஉன் இதழ்களிலே இருப்பதனால்
மணித்தமிழே உன்னை மன்றத்தில் வணங்குகிறேன்.

**(வேறு)**

தமிழ் கூறும் நல்லுலகே, உன்றன் காதில்
தங்களது கீதத்தை இசைக்க வந்த
அமிழ்தூறும் வாய்க்குயில்கள் ஆறு; பாடும்
அரும் தமிழர் சால்புகளோ ஏழு; பாட்டில்
தமைமறக்கும் திக்குகளோ எட்டு; பொங்கித்
ததும்புகின்ற இன்சுவைகள் ஒன்ப தானால்
கமழ்கவிதை அரங்குக்கு வணக்கம் கூறக்
கைகுவியச் சேர்ந்திடும்என் விரல்கள் பத்து.

**(வேறு)**

பாவலர் பாடல் கேட்டுப் பின்புதான்
பரிசு வழங்குதல் பண்டைய வழக்கம்.
பரிசு கொடுத்துவிட்டுப் பாடல் கேட்கிறார்



**வாழ்க்கையில் வெற்றி பெறுவதே கல்வியின் நோக்கம் என்று கருதுவது தவறு. வாழ்க்கையை வளமடையச் செய்வதே கல்வியின் நோக்கம்.**

**—டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்**

## தவப்புதல்வன் அண்ணா!

நாடு புகழ்ந்தேத்தும் நல்லபே ரறிஞன்
பாரிலுள் ளோருக்குப் பைந்தமிழ்ச் சாரதி
மலராடு சோலையில் வண்டாடு புதுமலர்
வழக்காடு மன்றத்தில் தேர்ந்த வழக்காடி
இன்னபுகழ் சேர்த்த எமதருமை அண்ணா
தாங்குபுகழ் தமிழினத்தின் தானைத் தலைவன்
ஓங்கியசீர் பாரதத்திற்குற்ற தனித்தலைவன்
தரணிபுகழ் அன்னை தமிழின் தவப்புதல்வன்

—தவத்திரு குன்றக்குடி அடிகளார்

பைந்தமிழ் முதல்வர் புரட்சித் தலைவி!
கொடையிலேகூட இவர் புரட்சி செய்கிறார்.
ஐந்தாம் உலகத் தமிழ்மா நாடு
கண்ண தாசன் தலைமையில் அரங்கம்
புரட்சித் தலைவர் எதிரே இருக்கிறார்.
பொங்கி வந்தது கவிதை எனக்கு!
காரணம் என்ன? மதுரையில் நான் அன்றோர்
கவிதை முன் அல்லவா கவிதை பாடினேன்!
எட்டாம் உலகத் தமிழ்மா நாடு
சுரதா தலைமையில் சொற்றமிழ் அரங்கம்
எதிரே இருக்கிறார் புரட்சித் தலைவி
பொங்கும் கங்கையாய் எனக்குள் கவிதை!
காரணம் என்ன? தஞ்சையில் இன்றொரு
காவியத்தின் முன் அல்லவா கவிதை இசைக்கிறேன்!

**(வேறு)**

எட்டுத் திசையும் வெற்றி முழக்கும்
இன்பத் தமிழின் மாநாடு
இத்தரை போற்றும் முத்தமிழ் முதல்வர்
கூட்டிய எட்டாம் மாநாடு

எத்திசை வாழும் தமிழரும் ஒன்றாய்
இணைகிற எட்டாம் மாநாடு
எங்கள் தமிழ்மொழி, எங்கள் தமிழ்மொழி!
எனும்இசை கேட்கிற மாநாடு

தொன்னூற் றைந்தாம் ஆண்டு பிறக்கையில்
தோன்றுது புத்தொளி தஞ்சையிலே
தொன்மைத் தமிழின் புதுமைப் பயிர்கள்
துலங்குது காவிரி நஞ்சையிலே

ஆயிரம் ஆயிரம் அருமைகள், பெருமைகள்
அழகிய முத்தமிழ் தனி உடைமை
அறிவியல் தமிழ்என்னும் நான்காம் பிரிவும்
அன்னைக் காகும் இனிஉடைமை!

ஆயிரத்திருநூ றாகிய அறிஞர்கள்
ஆய்வாம் மணிமுடி சூடுகிறார்.
அறிவுத் திருமகள் புரட்சித் தலைவி
அழைப்பினில் தஞ்சையில் கூடுகிறார்.

இயலும், இசையும், இன்றமிழ்க் கூத்தும்
எல்லா வேளையும் விருந்தாகும்
(-காலை, மாலை என்ற கணக்கே
இங்கே கைது செய்யப்பட்டுவிட்டது.)
இத்தனை காட்சியை எப்படிக் காண்பது
என்பது வார்த்தையின் தவிப்பாகும்.
புரட்சித் தலைவியின் அழைப்பை ஏற்றுப்
பூமிப் பந்தே மகிழ்கிறது!
பூவிரி சோலை காவிரிக் கரையில்
புதிதாய்த் தமிழ்யுகம் எழுகிறது.

தங்கத் தமிழ் மகள் வடிவினிலே ஒரு
தாரகை வந்தது மண் மீது!
தத்தித் தவழ்ந்த தமிழக வளர்ச்சி
தாவி எழுந்தது விண் மீது.

மகத்தில் பிறந்தவர் ஜகத்தை ஆள்வது
மாநிலம் சொல்லும் பழஞ்செய்தி.
மகமே இங்கு மாமகளாக
வந்து பிறந்தது புதுச்செய்தி!

பெரியார், அண்ணா, புரட்சித் தலைவர்
பெருமைகள் சேர்ந்தொரு பெண்ணாச்சு.
பெண்மைக்கரசி புரட்சித் தலைவி
என்னும் தமிழர் கண்ணாச்சு.

ஆயிரம் காலப் பயிராய் எங்கள்
அருமைத் தலைவி புகழ் வாழ்க!
அங்கயற் கண்ணி குங்குமம் எங்கள்
அரசர்க்கரசி தனைக்காக்க!

சக்தி குமாரன் தேவன் பாடும்
சங்கத் தமிழ் இது தோழர்களே,
சந்தனப் பொதிகைச் செந்தமிழ் போல
சந்ததம் முதல்வர் வாழியவே!

**(வேறு)**

சமூக நீதி காக்கும் வீராங்கனை வழிகாட் டுகின்ற
வரலாற்றுப் பாதையில்

சமூக நலம் காக்கும் அமைச்சர் அவர்களே,
அமைச்சர் எல்லாம் இப்படிக் கவிதை பாடினால்
கவிஞர் எல்லாம் என்ன ஆகலாம்?
அமைச்சர்கள் ஆகலாம்!
வராது இருக்கிறார் மலேசிய நாட்டின்
முன்னாள் அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள்.
மலேசியா -
நாடா அது?
செந்தமிழ், நற்சீனம், சிறந்த மலாயினம்
செப்பும் இம்மூன்றையும் சேர்த்துக் கட்டிய
நாடா அது!
மாபெரும் தமிழர் சாமுவேலர் இங்கு வந்திருக்கிறார்
மாரிமுத்து அவர்கள், என் இதயம் கவர்ந்த
ஈழத்தமிழரின் பிரதிநிதியாய்த்தொண்டமான் அவர்கள்,
அமைச்சர் பெருமக்கள் எல்லோர்க்கும் என்
வணக்கம்.
பேரவைத் தலைவர் அவர்களே,
அமைச்சர் பெருமக்காள், ஆன்றோரே, சான்றோரே
அனைவர் பெயரையும் நான் அவசரமாய்ச்
சொன்னாலும்
ஒன்பதாவது உலகத் தமிழ் மாநாடு வந்துவிடும்!
ஆகையால்,
ஒற்றை வணக்கம் நான் உரைக்கின்ற போதினிலே
உங்கள் திருப்பெயரை என் உதடுகள் சொன்னதாய்
கணக்கு வைத்துக் கொள்ளுங்கள்;
கை தட்ட மறக்காதீர்!
வங்கக்கடல் இன்று வழிமாறி உள்புகுந்து
தங்கக் கடலாகித் தஞ்சையிலே கூடியதா?
கடல் என்றாலே இது ஆழக்கடல்,
பசுபிக் கடலைப் போல்!
பசுபிக் என்றாலே அமைதி என்பதனால்
அப்பெயரை வைத்தார்கள்.
ஒரு வேளை
கடல் என்று சொன்ன காரணத்தால் எல்லோரும்
அமைதியாய்க் கவி அரங்கம் கேட்கிறாரோ?
எனக்குத் தெரியாது!
உங்கள் இதயத்தைத் தொட்டுப் பார்க்கின்ற
இனிய வரிகள் வந்தால்
அவ்வப்போது உங்கள் கரங்களுக்கு வேலை
கொடுங்கள்.
இதுதான் இந்த நாட்டுக்குத் தேவையான **கரசேவை!**
வங்கக் கடல் இன்று வழிமாறி உட்புகுந்து
தங்கக் கடல் ஆகித் தஞ்சையிலே புகுந்ததா?
புனித நதிகூடும்
முக்கூடல் சங்கமம் போல்,
இது மனித நதிகூடும் மகத்தான சங்கமமா?
கண்ணெட்டும் வரைக்கும் கருத்திருக்கும் தலைகள்,
சாயம் பூசாமலே கருத்திருக்கும் தலைகள்!
கண்ணெட்டும் வரைக்கும் கருத்து இருக்கும் தலைகள்
கவியரங்க மேடையிலும் கருத்து இருக்கும் தலைகள்;



## உள்ளம் கொள்ளை கொண்டவர்!

**தொல்காப்பியரும், திருவள்ளுவரும் இளங்கோவடிகளும் திருமுறை ஆசிரியர்களும் சேக்கிழாரும் கம்பரும் புகமுடியாத தமிழ் உள்ளங்களிற் புகுந்து நின்று ஒளிவளர் விளக்கேற்றிய அறிஞர் அண்ணா, எழுத்தும் பேச்சும், அன்பும் இன்பமும் கொண்டு கோடிக்கணக்கினரான தமிழ் மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட திறம், வரலாற்றில் இதுகாறும் ஒருவரும் பெற்றிராத பெருஞ் சிறப்பு.**

**—பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.**

ஆம் கருத்து இருக்கும் தலைகள்!
அரங்கத் தலைவர் சுரதா
சுரதா தமிழின் சுரதம் சுரதா
சுரதா தமிழைத் தவிரத் துதியா
விரதா கரதா மரைகள் குவியச்
சுரதா அருளைச் சுரதா சுரதா

தேக்கும் கவிதைப் புனல் நீ சுரதா,
தேனார் தமிழின் திறம் நீ சுரதா
யாக்கும் கவிதைக்கெது காரணம்? உன்
மூக்குப் பொடியா மொழிவாய் சுரதா?

### வீரம்

காதலுக்கு எத்தனை வயது?
கண்களுக்கு எத்தனை வயது-
அத்தனை வயது காதலின் வயது!

வீரத்திற்கு எத்தனை வயது?
இரத்தத்திற்கு எத்தனை வயது?
அத்தனை வயது வீரத்தின் வயது!

வீரத்திற்கு எத்தனை வலிமை?
வானத்தின் இடிக்கு என்ன வலிமை,
அந்த வலிமை வீரத்தின் வலிமை!

வீரம் இல்லாதவன் கையிலே கேடயம்.
தோசைக் கல்லுக்குத் தோதாக இருக்கும்.
வீரம் இல்லாதவன் கையிலே போர்வாள்,
நகக்கண் இடுக்கில் சிக்கிக்கொண்டிருக்கும்

அழுக்கை அகற்ற மட்டுமே பயன்படும்!
சங்கப் புலவர்கள் கண்ட சால்பு
வீரம் - மகத்தான வீரம்!

இன்றைக்குக்கூட வீரர்கள் இருக்கிறார்.
தோழனிடம்ஒரு வீரன் சொன்னான்-
"வேங்கையை நேற்று வேட்டையாடினேன்
இதோ பார்த்தாயா வேங்கையின் கால்கள்!"
நண்பன் கேட்டான்-
"தலையைக் கொண்டு வந்திருக்கலாம் இல்லையா?
கால்களை ஏன் காட்டுகின்றாய்?"
வீரன் விளக்கினான்-
"நான் என்ன செய்வது
எனக்கு முன் எவனோ கொண்டுபோய்விட்டான்!"
இதுவா வீரம்?

பிளந்த வாயுடன் முதலைகள் மொய்க்கும்
பள்ளம், அதனைச் சுற்றிலும் மேடை
வேடிக்கை பார்க்கத் திரண்டது கூட்டம்
அழகி ஒருத்தி கைக்குட்டையை
அந்தக் குளத்திலே வீசியெறிந்தாள்;
நினைவு வையுங்கள்-
முதலைகள் மொய்க்கின்ற மாபெரும் குளம்.
"குட்டையில் மூழ்கிக் கைக்குட்டையைக் கொண்டுவரும்
அற்புத வீரனைத் திருமணம் புரிவேன்
விருப்பம் உள்ளவர் விரைக" என்று உரைத்தாள்.
அறிவிப்பு முடிந்ததும்
அமைதி, அமைதி, அப்படி அமைதி!
'குபீர்' என ஓசை!
குளத்தில் எவனோ குதித்துவிட்டிருக்கிறான்.

ஒரு நிமிடம்! ஒரே ஒரு நிமிடம்!
உயரே இருந்தவர்
உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருக்க
கைக்குட்டையுடன் அவன் கரையிலே ஏறினான்.
எல்லோர் விழிகளும் அவனையே நோக்கின;
எத்தனை வீரம் என்றிசை பாடின.
அவனோ யாரையோ தேடிக் கொண்டிருந்தான்;
"என்னதம்பி விஷயம்" என்றொரு முதியவர் கேட்டார்;
"எவனோ என்னைக் குப்புறத் தள்ளினான்.
அவனை உதைக்கத் தேடிக் கொண்டிருக்கிறேன்"
என்று சொன்னானாம்.
இப்படிச் செயற்கை வீரமும் உண்டு!

பெண்களைப் பார்க்கையில்
பேச்சாளர் எல்லாம் ஊமைகள் ஆகிறார்கள்.
**All orators are dumb when beauty pleadeth!**

காளையை அடக்கும் காளைக்கே பெண்ணைக்
கட்டிக் கொடுப்பது அன்றைய வழக்கம்.
கலித்தொகைப் புலவன் கவிதை சாட்சி
இது நடக்குமா?
"இதோ பாரம்மா இவன்தான் வீரன்
காளையை அடக்கிய கட்டிளம் காளையை
மணந்துகொள்ள மகிழ்ச்சிதானே?"
எனத் தாய் கேட்டாள்.
என் சொல்வாள் இன்றைய திருமகள்?
"அம்மா அறியாத அசடுநீ இதைக் கேள்!
மாட்டையே அந்தப் பாடு படுத்தினான்
மங்கையை என்ன பாடு படுத்துவான்?
எனக்கு வேண்டாம்" என்று சொல்கிறாள்.

ஆண்மை இங்கு பெண்மை அடைகிறது;
பெண்மை இங்கு ஆண்மை அடைகிறது!
ஆகவே, இங்கு சோதனைக் குழாய்களே
கருத்தரிக்கின்றன!

நாம்எல்லாம் எப்போதும்
வீரத்தைப் பற்றி விளக்கமாய்ப் பேசுவோம்.
நாங்கள் எல்லாம் பாட்டுடைத் தலைவராகப்
பவனி வந்தாலும்,
வீட்டுக்குள் நாங்கள் எல்லோரும் பாட்டுடைத்
தலைவர்கள்தான்
மனைவியின் பாட்டுடைத் தலைவர்களே நாங்கள்!

எமலோகத்தில் ஒரு நாள் நடந்தது-
பூலோகத்தில் இருந்து புதியதாய் வந்திருந்த
ஆண் ஆவிகளை வரிசையாய் நிற்க வைத்தார்கள்.
மனைவி சொல் கேட்கும் கோழைகள் ஒருபுறம்
மனைவி சொல் கேளாத மாவீரர் மறுபுறம்.
ஆவிகள் எல்லாம் அப்பாவிகள் ஆக,
ஒரே வரிசையில் அணிவகுத்திருந்தன.
மனைவி சொல்லே மந்திரம் என்றன,
ஒரே ஓர் ஆவி ஒதுங்கி நின்றிருந்தது.

எமனுக்கு மகிழ்ச்சி; எல்லையில்லா மகிழ்ச்சி.
பூலோகத்தில் ஒரு பயலாவது இப்படி
மனைவி சொல் கேளாத மாவீரனாக
இருக்கின்றானே என்று மகிழ்ச்சி.
இருந்தாலும் அவன் வாயிலிருந்தே அதை
வரவழைக்க எமனார் கேட்டார்-
"என்னடா பயலே நீ என்ன
துணைவிக்கு அச்சாத துணிச்சல் மிக்கவனோ?"
என்று கேட்டதும், ஆவி உரைத்தது
"இப்படிப்பட்ட சமயங்களில் எல்லாம்
எப்படிச் செயல்படுவது என்று எனது மனைவி
எனக்குச் சொல்லி அனுப்பாததாலேதான்
தனித்து நிற்கிறேன்" என்று சொன்னானாம்.
இதைக் கேட்டவுடன் எமதர்மராஜர்

# அண்ணாவும் நாதஸ்வரமும்

அண்ணா அவர்களுக்கு நாதசுர இசை என்றால் மிகச் சின்னஞ்சிறு பருவத் திலிருந்தே மிக்க ஆர்வம் உண்டு. நடு இரவில், நிலவொளிக் காலத்தில் தோழர் இராசரத்தினம் அவர்களின் நாதஸ்வர இசை, தெருக் கோடியிலே எழும்ப-அதனைத் தொலைவில் நின்று கேட்பதிலே அண்ணா அவர்களுக்குத் தனி விருப்பம்.

அறிஞர் அண்ணா அவர்கள் திருவாடுதுறை இராசரத்தினம் அவர்களின் நாதசுர இசையிலே திளைத்து, அவரைப் பலபடப் பாராட்டிப் போற்றி மகிழ்ந்து அவரோடு இனிய முறையிலேயே பழகி வந்தார்கள்.

நாதசுர மன்னர் டி.என். இராசரத்தினம் அவர்களின் நாயனக் கச்சேரி அண்மையில் எங்கேனும் உண்டு என்றால், அங்கு போகும் வாய்ப்பு இருக்கிறதென்றால், அண்ணா அவர்கள் அங்கு ஓடோடிப் போய் இருந்து, அவரது நாதசுர இசையைக் கேட்டு மகிழ்வார்கள்.

அவையில் தம் எதிரே அண்ணா அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்துவிட்டால், தோழர் இராசரத்தினம் அவர்கள் பெருமகிழ்ச்சியுற்று, பெரு முயற்சி எடுத்து, மிகத் திறம்பட நாயனம் வாசித்துக் காட்டுவார்கள்.

திருச்சியில் தோழர் டி.பி. பொன்னுசாமி அவர்கள் வீட்டுத் திருமணம் ஒன்றிற்குத் தோழர் இராசரத்தினம் அவர்களின் நாதசுர இசையரங்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. நாதசுர இசையரங்கு முடியும் தறுவாயில் அறிஞர் அண்ணா அவர்கள் அங்கு வந்தார்கள். அண்ணா அவர்கள் வந்துவிட்டார்கள் என்பதை அறிந்தவுடனே, தோழர் இராசரத்தினம் அவர்கள் தம் களைப்பையும் பாராமல், வாசிப்பை நிறுத்த வந்த நிலையை மாற்றி, மேற்கொண்டு ஒன்றரை மணி நேரம் மிக நேர்த்தியாகத் திறம்பட வாசித்துக்காட்டினார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!.

–திரு. பொன். கு. கோதண்டபாணி எழுதிய 'அறிஞர் அண்ணா வாழ்க்கையில் சுவையான சம்பவங்கள்' என்னும் நூலிலிருந்து.

---

மயங்கி விழுந்தார்!
ஏனென்றால் அன்றைக்கு
எமகண்ட வேளையில் சபைக்கு வந்திருந்தார்!

பெண்கள் உரிமை பற்றிப் பேசுவதற்கு நாம் யாரோ,
அவர் நமக்கு உரிமைகளை
அளித்திருப்பதால் அன்றோ
அரங்கத்தில் இன்றைக்கு ஆர்ப்பாட்டம்
நடத்துகின்றோம்!
அனைத்துலக ஆண்கள் ஆண்டு
International men's year!
அனைத்துலக ஆண்கள் ஆண்டு ஒன்று கொண்டாட
பெண்கள் அனுமதித்தால் பேருதவியாக இருக்கும்:

நான் பாரதியைக் கேட்டேன்,
செல்லம் மாளைக் கேட்டுச்செப்புவதாகச் சொன்னான்.
பாவேந்தர் பாரதிதாசனைக் கேட்டேன்
பழனியம்மாளைக் கேட்டுப் பகர்வதாய்ச்
சொல்லிவிட்டான்!
என் வீட்டிலும் அதே கதைதான்!

அன்றைய வீரம்
"சிற்றில் நற்றூண் பற்றி
யாங்காகியரோ நின் மகன்?"
கேட்கிறான் ஒரு நண்பன்:
"தாயே உன் மகன் எங்கே?"
அப்போது சொல்கிறாள்
"அவன் எங்கோ தெரியாது.
புலி இருந்து போகிய மலைக்குகை போல
ஈன்ற வயிறு இதுதான். தோன்றுவான்
எங்கோ போர்க்களம் தனிலே!"
பெற்ற வயிறு இது; ஆனால்
எங்காவது போர்க்களத்தில் போய்ப்பார் என்றாள்.

இன்றைக்கு எப்படியிருக்கும்?
தாய் சொல்கிறாள்
"பஜாஜ் வண்டியில் பாங்குற வந்து
மச்சியைத் தேடும் மதனகோபாலனே
ஈன்ற வயிறோ இதுவே,
தோன்றுவான் ஏதோ தியேட்டரில்தானே".
இப்படி உரைப்பாள் என்று சொன்னாலும்,
பாம்புக் குட்டிக்குப் பல் விளக்கத் துடிக்கின்ற
இளைய வீரர்கள் இன்னும் இருக்கிறார்

சங்க காலத்து வீரர்களைப் போல
அண்மைக் காலத்திலும்
வீரத்தின் விளைநிலம் வ.உ.சி. இருந்தார்,
பாடல் எரிமலை பாரதி இருந்தான்,
வாலிபப் புயலாய் வாஞ்சி இருந்தான்.

வாஞ்சி என்பவன் வீரனே அல்லன்;
அவன் ஒரு அற்புதமான ஆராய்ச்சி மாணவன்.
எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டு
ஆராய்ச்சி அரங்குக்கு வரவேண்டிய
ஆராய்ச்சி மாணவன்.
வாஞ்சி என்பவன், என்னதான் செய்தான்?
அனைத்தையும் சுட்டால் Ash கிடைக்கிறது.
அந்த ஆஸ்சையே சுட்டால் எது கிடைக்கிறது?
என்று ஆராயப் போனவன்!

வீரம் இல்லாத அடிமை இனத்திற்கு
சுதந்திரம்கூட சுமையாய் இருக்கும்.
எருமைக்கும் அடிமைக்கும் என்ன வேறுபாடு?
கழுத்துப் புண்ணைக் கொத்திக்கொண்டிருக்கும்
காக்கையை விரட்ட
எருமை மாடு தன் தலையை ஆட்டும்.
அடிமை மனிதனோ அந்த நேரத்திலும்
எஜமான் உத்தரவை எதிர்பார்த்திருப்பான்.


இயற்கையில் ஒரு காட்சி,
தினசரி நாம் காண்கின்ற காட்சி,
நகர்ப்புறங்களில், சிற்றூர்ப் புறங்களில்.
குஞ்சின் கூக்குரல் நெஞ்சைக் கிழிக்க கோழி வந்தது
குன்றி மணிபோல் சின்ன கண்கள்
சிவந்துபோயிருந்தன
என்ன காரணம்?
ஏகாதிபத்தியப் பருந்து தலைக்குமேல்
பறந்து கொண்டிருந்தது.
குஞ்சைக் கவ்வப் பறந்தது பருந்து.
எதிர்த்துத் தாக்க முனைந்தது கோழி.
கண நேரம்தான்.
வென்றதோ கோழி,
விரைந்ததோ பருந்து,
விண்ணிலே கேலிச் சிரிப்பும் எழுந்ததே,
ஆமாம் தோழனே
வென்றது கோழிதான்,
ஏகாதிபத்தியப் பருந்து அல்ல.
விசித்திரம் இதிலே யாதோ என்றால்,
பருந்தின் ஆற்றலில் பாதிதான் கோழி
பறக்கும் கலையையும் மறந்துவிட்டிருந்தது.
கோழிக்கு வீரத்தைக் குறைவறக் கொடுத்தது
தாய்மைதான்.

தாய்மைதான் வீரம்!

தமிழ் இனம் காக்கும் தமிழக முதல்வர்
தாய்போல் இப்படி நம்மைக் காக்கிறார்.
வெற்றித் தலைவியின் விழி இரண்டில்தான்
வீரம் வந்து நெருப்பெடுக்கிறது!
அச்சம் என்பது,
புரட்சித் தலைவியை அணுகக் கூட அச்சப்படுவது.
வீரத்திற்கு விதைதான் தியாகம்; புரட்சித் தலைவி
உண்ணா நோன்பு இருந்து உடலை வருத்தி அன்று
உரிமை பெற்றுத் தந்தாரே அதுவும் வீரம்தான்.
தன்னை வருத்துகின்ற மாபெரும் தியாக வீரம்!

வீரத்திற்கு விதைதான் தியாகம்!
கோழையின் மனைவி குங்குமம் வைக்கிறாள்.
வீரனின் மனைவி விதவையாய் நிற்கிறாள்.
தியாகமே இதனைத் தீர்மானிக்கிறது!
சாவு எனக்கு மற்றொரு வாழ்க்கை
சவக்குழி எனக்கொரு ஆடாத தொட்டில்
ஏற்ற கடவுள் கிடைக்கிற வரைக்கும்
எனக்கு நானே மாபெரும் தெய்வம்.
என்ற நினைப்பே இன்றைய தமிழர்க்கு
எப்போதும் தேவை!
அதை நமக்கு
வழங்க வந்திருக்கிறார் புரட்சித் தலைவி என்பது
வண்ணம் பூசப்படாத உண்மை
சாயம் பூசப்படாத சத்தியம்!
அவர் தாழ்த்தப்பட்ட இனத்திற்குக் கேடயம்
பிற்பட்டோரின் அற்புதக் கவசம்
தாழ்ந்த தமிழரின் கையிலே போர்வாள்
தருக்கரின் கொடுக்கை நறுக்கிடும் அரிவாள்.
புதுப்பிக்கப்பட்ட புறநானூறு,
புதியதாய் எழுந்த கலிங்கத்துப் பரணி
நில்லாமல் சுழலும் நிர்வாகப் பம்பரம்
நினைத்தை முடிக்கும் புயல்வேகச் செயல் திறம்
பார்த்தால் தென்றல், பகைத்தால் நெருப்பு,
பொறுத்தால் பூமி, பொங்கினால் மாகடல்,
குணத்தால் தங்கம், கொதித்தால் சிங்கம்!

பாரதியின் சிந்தனையின் வளமும்
பாவேந்தன் கற்பனையின் நயமும்,
பாட்டுச் சூரர் சுரதாவின் திறமும்,
வார்த்தைத் தேர் இழுக்கும் புலமைப்பித்தன் நயமும்
இந்தப்பார் இருக்கும் நாள்வரைக்கும் இருக்கும்!
(இந்தப் பட்டியலில்
இந்தத் தேவனது தேன்தமிழையும்
சேர்த்துக்கொள்ளுங்கள்.)
இவையெல்லாம் இந்தப் பார் இருக்கும்
நாள்வரைக்கும் இருக்கும்.
எங்கள் பைந்தமிழ்த் தாய் தனது புகழ்
அதையும் தாண்டும்!



# இவர்தான் பாரதி

இருபத்தியேழு வயதான பாரதி பாண்டிச்சேரியில் ஊக்கமும் செழிப்பும் கொண்ட கவர்ச்சிகரமான இளங்காளையாயிருந்தார்; பாரதி அழகுப் புருடராக விளங்கினார்; சிவந்த, மெல்லிய மேனியும் பிரகாசமான கண்களும் கூர்மையான மூக்கும் அகன்ற நெற்றியும் இவரை உண்மையிலேயே கம்பீரத் தோற்றங்கொண்டிருக்கச் செய்தன. அவர் மனைவியார் பாரதி பொன்னிறமாயிருந் தாரெனக் கூறுகிறார். பாரதியின் உடற்தோற்றங் குறித்து வ.ரா. கூறுவதைப் படியுங்கள்:

"பாரதியார் சுந்தர ரூபன்; மாநிறம், ஐந்தரை அடிக்கும் கொஞ்சம் அதிகமான உயரம். அவரது மூக்கு, மிக அழகானது; அவரது கம்பீரமான முகத்துக்கு அளந்து அமைக்கப்பட்டதைப் போலிருக்கும் அந்த அழகிய மூக்கு. சீசர், இராஜகோபாலாச்சாரியார் ஆகியவரது போல வளைந்த மூக்கல்ல. சீசர் மூக்கு நடுவில் உயர்ந்து, நுனியில் கூர்மையாகி, கண்டவர்களைக் கொத்துவது போலத் தோன்றும். பாரதியாரின் மூக்கு கடைசல் பிடித்தது போலிக்கும்; நீண்ட நாசி, அந்த நீளத்தில் அவலட்சணம் துளிக்கூட இருக்காது.

பாரதியின் கண்கள் செவ்வரிபடர்ந்த செந்தாமரைக் கண்கள். இமைகளின் நடுவே அக்கினிப் பந்துகள் ஜொலிப்பது போலப் பிரகாசத்துடன் விளங்கும். அந்தக் கண்களை எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டிருந்தாலும் தெவிட்டாது.

அவரது நெற்றி பரந்த நெற்றி. பாரதியாருக்கு மீசை உண்டு. அது பார்க்க ரொம்ப நேர்த்தியாக இருக்கும். தானாகவே வளர்ந்தது; மிக்க பெருமிதத்தோடு புன்சிரிப்பது போலத் தோன்றும்".

பாரதியை நேரில் கண்டு அவர்பால் உள்ளத்தைப் பறிகொடுத்த கவி சுத்தானந்த பாரதி அவரது தோற்றத்தை வருணிக்கும் வகை இது:

"கோபுரம் போல நிமிர்ந்து, 'அச்சமில்லை, தலை குனியாதே தமிழா' என்று பேசும் அந்த வீரத் திருமுகம் நமது கண்முன் நிற்கிறது. அறிவும் வீரமும் பொழியும் அந்தக் கனல் விழிகளே நம் முன் நிற்கின்றன. தீக்கொழுந்து போல் நிமிர்ந்து நிற்கும் அவரது மீசை".

—'சுப்பிரமணிய பாரதி' என்னும் நூலில்
திருமதி எஸ். விஜயபாரதி

எவ்விதம் ஒரு அரிமா தன்னுடைய கூரிய நகங்களைப் பதியவைத்து அடையாளம் உண்டாக்குகிறதோ, அது போன்று நான் என்னுடைய மனத்திடத்தால் என் பெயரை உலக வரலாற்றில் பதிய வைப்பேன். என்னுடைய இந்தத் தீவிரமான அவாவே என்னுடைய ஒவ்வொரு அணுவிலும் ஊடுருவிச்சென்று நிறைந்து நிற்கிறது.

—முசோலினி

# கல்விச் செல்வம்



## ஆசிரியர் தினம் குறித்து

## –மாண்புமிகு முதல்வர் வாழ்த்துச் செய்தி

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு (செப்டம்பர் - 5) மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டு உள்ளார். அதில் அவர் கூறி இருப்பதாவது:

உலகு போற்றும் தத்துவ மேதைகளில் ஒருவராகத் திகழ்ந்த முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர், டாக்டர் எஸ்.



ராதாகிருஷ்ணன் பிறந்த நன்னாளே இந்தியாவில் ஆண்டுதோறும் 'ஆசிரியர் தினம்' எனக் கொண்டாடப்படுகிறது. அம்மாமனிதரின் நினைவைப் போற்றுகின்ற வண்ணம், ஆசிரியர் தினம் நாடெங்கும் கொண்டாடப்படுகின்ற இவ்வினிய வேளையில், தமிழகத்தைச் சேர்ந்த ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வி அறிவை வளர்ப்பதன் மூலம்தான், ஒரு நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும், வாழும் மக்களின் முன்னேற்றத்திற்கும் வழி வகுக்க முடியும் என்ற உண்மையை உணர்ந்து செயல்பட்ட உலக நாடுகள் பல இன்று வளர்ச்சிப் பாதையில் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கின்றன.

கேடில் விழுச் செல்வமாம் கல்விச் செல்வத்தை அனைவருக்கும் நல்கி, நாட்டையும் வீட்டையும் உயர்த்தும் உன்னதப் பாதையில், சமுதாய உணர்வுடன் ஈடுபட்டு, கடமையாற்றி வரும் நமது மதிப்பிற்குரிய ஆசிரியப் பெருமக்களின் உன்னத சேவையை உளமாரப் போற்றுகின்ற வகையில், ஆண்டுதோறும் நாம் 'ஆசிரியர் தின' விழாவைக் கொண்டாடி வருவதும் மிகவும் ஏற்புடைய செயல் ஆகும். எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்கும் மாபெரும் பணியில் கடமை உணர்வுடன் ஈடுபட்டுள்ள ஆசிரிய சமுதாயத்தின் சேவையை நினைவுகூர்ந்து நன்றி பாராட்டும் நல்ல நாள் இந்நாள்.

சமுதாய வளர்ச்சியில் முக்கியப் பங்கு கொண்டுள்ள பொறுப்பு வாய்ந்த ஆசிரியப் பெருமக்களின் நல்வாழ்விற்கும் நலனுக்கும் தேவையான ஆக்கபூர்வமான திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வரும் தமிழக அரசு, அவர்கள் வாழ்வில் ஏற்றம் பெறவும், மன மகிழ்ச்சியோடு பணியாற்றவும், எல்லா நடவடிக்கைகளையும் உறுதியுடன்

# மாவீரர் வ.உ.சி.



*ம*றைந்த மாவீரர் வ.உ.சிதம்பரனார் அவர்களையும், அவர் நாட்டின் விடுதலைக் காகவும் ஆற்றிய அரும்பெரும் தொண்டு களையும் மக்கள் மறக்க முடியாது.

உண்மையாகவே நாட்டுக்கு விடுதலை யும், மக்களுக்கு நல் வாழ்க்கையும் ஏற்பட வேண்டும் என்ற பொதுநல நோக்குடன் பேரையும் புகழையும் விரும்பாமல் ஆடம்பரம் அற்ற வாழ்க்கையை நடத்தி நாட்டுப் பணியாற்றியவர் வ.உ.சி.!

வெள்ளையன் இந்த நாட்டை விட்டு விரட்டப்பட வேண்டுமானால், அவனுடைய ஆதிக்கத்தின் ஆணிவேரான வியாபாரத் துறையைத்தான் முதலில் கைப்பற்ற வேண்டும் என்ற ஒரு சிறந்த திட்டத்தை, முதலில் வகுத்த பெருமை சிதம்பரனாருக்கே உரியதாகும்.

*1906*-இல் அவரால் ஆரம்பிக்கப்பட்ட "சுதேசிக் கப்பல் கம்பெனி" இந்தச் சிறந்த நோக்கத்துடனேயே தொடங்கப்பட்டது ஆகும்.

–பேரறிஞர் அண்ணா

---

மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் முதல் முறையாகக் கட்டாயத் தொடக்கக் கல்விக்குச் சட்டமியற்றி, கல்வி வளர்ச்சியில் முன்னோடியாக விளங்கும் தமிழகம், ஒரு புதிய எழுச்சியுடன் ஆசிரியர் தினத்தைக் கொண்டாடும் இந்த இனிய வேளையில், அரிய கல்விப் பணியாற்றி, தமிழக அரசு ஆண்டுதோறும் வழங்கி சிறப்பிக்கின்ற நல்லாசிரியர் விருதுகளைப் பெறுகின்ற இருபால் ஆசிரியப் பெருமக்கள் அனை வருக்கும், எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்காலச் சந்ததியினரை உருவாக்கும் மாபெரும் பொறுப்பை, ஆசிரியப் பெருமக்கள் உவகையுடன் ஏற்று, உன்னதப் பணியாற்ற வேண்டும் என்றும், அத்தகைய ஆசிரியப் பெருமக்களின் வாழ்வில் எல்லா வளமும் நலமும் வந்து சேர வேண்டும் என்றும் நெஞ்சார வாழ்த்துகிறேன்.

# பெண்ணின் பெருமை:

# குடும்பம்

–முனைவர் இராம சௌந்தரவல்லி

**த**மிழ் என்பதை ஆரிய அரசனுக்குக் கற்பித்துக் கொடுக்க கபிலர் என்ற மகா புலவர் ஒருவர் செய்த முயற்சி என்ன தெரியுமா? அவருக்குத் தமிழ் எழுத்துக்களைக் கற்பிக்கவில்லை. தமிழ் இலக்கண இலக்கியங்களைச் சொல்லித் தரவில்லை. தமிழ் என்றாலே இந்தத் தமிழ் மண்ணிலே பிறந்திருக்கக்கூடிய பெண்ணின் பெருமைதான் தமிழ் எனப்படும் என்றுதான், 'குறிஞ்சிப் பாட்டு' என்ற ஒரு மிகச் சிறந்த இலக்கியத்தைக் கற்பித்தார்; இந்தத் தமிழ் மண்ணிலே தோன்றிய ஒரு பெண் எப்படி தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்வாள் என்பதைக் கற்பித்துக் கொடுத்தார்.

அந்த வகையிலேதான் தமிழ் மாநாடு கூட்டியிருக்கின்ற தமிழக முதலமைச்சர் 'பெண்ணின் பெருமை' என்ற கருத்தரங்கினுக்குச் சிறப்பிடம் கொடுத்து இருக்கின்றார்.

'குடும்பம்' என்று பேசுங்கள் என்று எனக்குச் சொல்லப் பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்தப் பெண்ணியம் என்பதும், பெண் உரிமை என்பதும், பெண் உரிமைச் சங்கங்கள் சார்ந்து பேசுவது என்பதும், ஒரு மரபாக மாறிப்போய்விட்டதோ என்று கூட எனக்குச் சில சமயங்களிலே எண்ணத் தோன்றும்.

அப்படிப் பேசுவதால், நமக்கு ஏதாவது பயன் இருக்கிறதா என்று சிந்தித்துப் பார்க்கும் போது, 'குடும்பம்' என்ற தலைப்புக்குள் நுழைகின்றபோது- இந்தச் சிந்தனைகளைக் கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு, நம்முடைய தமிழ்ப் பாரம்பரியத்துக்கு ஏற்ப, தமிழ் மாநாடு கூட்டுகின்ற நாம், தமிழ்க் குடும்பங்கள் எப்படி இருந்தன, இந்தத் தமிழ்க் குடும்பங்கள் பெண்ணால் எப்படிப் பெருமைப்பட்டன, ஒரு பெண் குடும்பத்தால் எப்படிப் பெருமைப்பட்டாள் என்பதைப் பேசுவது சிறந்தது என்று நினைக்கிறேன்.

## இரசாயன மாற்றம்

ஓர் அரும்பு தோன்றுகிறது, மொட்டாக வளர்கிறது. பிறகு மலராக மலருகின்றபோது அதனுடைய மணம் அதற்கும், பிறருக்கும் பயனடைவதாக அமைகிறது. அதுபோன்றதுதான் ஒரு பெண்ணினுடைய வாழ்க்கையும்.

அவள் சிறுமியாக நடமாடுகின்றவரையிலும் பெண் பெருமைக்குரியவள் என்று யாரும் அவளைச் சொல்லுவதில்லை. குழந்தைதான்; எத்தனை வயதானாலும் அவள் சின்னக் குழந்தையாகத்தான் கருதப்படுகின்றாள். ஒரு குடும்பத்திற்குத் தலைவியாக ஆனபிறகு, வேறு யாரும் அவளுக்கு அந்த மரியாதை தர வேண்டாம், தானாகவே தமிழ்ப் பெண் தன்னை உயர்த்திக் கொண்டுவிடுகிறாள். ஒரு இரசாயன மாற்றம் அவளுக்குள்ளேயே ஏற்பட்டுவிடுகின்றது. அது ஒரு இரண்டு நாள், ஐந்து நாள் குடும்பத் தலைவியாகப் பொறுப்பேற்ற, 5-வது நாளிலேயே அந்தப் பெண்ணினுடைய உணர்வுகள் மாறிப் போய்விடுகின்றன.

20 வயது வரைக்கும் நம்ம வீடு, நம்ம வீடு என்று சுற்றிவந்த பெண், இப்போது ஒரு குடும்பத் தலைமையை ஏற்றுக்கொண்டு கணவன் வீட்டுக்குப் போய் விட்டுத் திரும்பிவருகிறாள் என்றால், தன் தாயிடம் பேசுகின்றபோது 'எங்கள் வீட்டிலே' எனத் தான் தொடங்குவாள்.

அந்த வார்த்தை எப்போது அவள் வாயில் வந்துவிடுகிறதோ, அன்றைக்கே அந்தப் பெண் மாறிப்போனாள் என்பது

தான் உண்மை. இந்த மாற்றம் யாராலும் ஏற்படுத்தப்படுவதில்லை. அல்லது கட்டாயமாகத் திணிக்கப்படுவதில்லை இது இயல்பாக அவளுக்குள்ளேயே மாறிப்போன ஒன்று.

இதைத்தான் நம்முடைய தமிழ் இலக்கணம் ஒன்று மிக அழகாக எடுத்துக்காட்டுகிறது. கணவன் வீட்டிற்குச் சென்று திரும்புகின்ற ஒரு பெண் கூறுகின்றாள்.

'அம்ம வாழி தோழி -என்று மகிழ்வோடு பேசத் தொடங்குகிறாள்.

**கலங்கிய நீரிலும் சுவை**

அவள் கணவன் வீடு ஒரு பாலை நிலம் மாதிரி; ஒரு காடு மாதிரி, 'தண்ணீர் இல்லாத காடு'- நமக்கு அந்த வார்த்தை நன்றாகத் தெரியும். அந்தக் காட்டுக்குப் போய்விட்டு வருகின்ற பெண் அவள். தாய் வீட்டிலே என்ன இருக்குமாம்? தேன் கலந்த பால் உண்டு இங்கே!

அப்படிக் குடித்து, சுவைத்து, மகிழ்ந்து, செல்வச் செழிப்போடு வளர்ந்தவள்தான்! ஆனால், ஐந்தாறு நாளிலே திரும்ப வந்த பெண் என்ன சொல்கிறாள்', நம் வீட்டுத் தேன் மயங்கு பாலைவிட இனிமையானது, அவனுடைய நாட்டிலே மான் குடித்துவிட்டு எஞ்சி, ஒரு சின்ன பள்ளத்திலே கிடக்கக்கூடிய கழுனி நீர்!' என்கிறாள்.

'கழுனி நீர் என்று சொன்னால் கலங்கிய அந்தச் சிறிய அளவு நீர். அந்த நீரே, தலைவன்

> **எக்கணத்திலும் என் உள்ளம் தளர நான் அனுமதிப்பதில்லை. எச் செயலைச் சாதிப்பதற்கும் குன்றா உழைப்பு, குறையா முயற்சி, கூரிய அறிவு ஆகிய மூன்றும் மிகவும் வேண்டற்பாலன.**
>
> **–எடிசன்**

நாட்டு நீர் என்பதால் சுவை உடையது என்கிறாள்.

இந்த உணர்வு ஐந்து நாள் அல்லது ஒரு வாரத்திற்கு முன்னால் அந்தப் பெண்ணுக்கு நிச்சயம் வருவது இல்லை!

தான் குடிக்கிற டம்ளரில் அண்ணன் குடித்துவிட்டால் எச்சில் பண்ணிவிட்டான் என்று சண்டை போட்ட அதே பெண் தான், இப்போது ஒரு வாரத்திற்குள்ளே இந்த மாற்றம் பெறுகிறாள்! இது அவளுக்குள் எப்படி ஏற்பட்டது? அதைத்தான் தமிழ் இலக்கியம் சுட்டிக் காட்டுகிறது.

**அன்பு சாம்ராஜ்யம்**

இவள் குடும்பத்திலே பொறுப் பேற்றுக்கொண்ட பிறகு, இவளுக்குள்ளே ஏற்படுகின்ற மிகப் பெரிய மாற்றம் இது. இந்த மாற்றம் இருக்கின்றதே, இது கட்டாயத்தால் வருவதில்லை. இது அடிமைத்தனத்தின் வெளிப்பாடு அல்ல. ஒரு அன்பு சாம் ராஜ்யத்திற்கு இவள் என்றைக்குத் தலைவியாகிறாளோ அன்று தானாகவே ஏற்படக்கூடிய ஒன்று.

**அடிமைத்தனம் அல்ல**

தியாகம் செய்யவேண்டும் என்றாலே தாய்மை உள்ளம் வேண்டும். தாய்மை உள்ளம் என்பது எவ்வளவு பரந்துபட்ட அன்பைத் தனக்குள்ளே பெற்றிருப்பது அது தனக்குக் கிடைக் கின்ற அன்புக்கு என்ன வரையறை சொல்கிறது?

நம்முடைய பண்டை இலக் கியங்கள் வாழ்க்கையைப் பிரதிபலிப்பவை! இன்றைக்கு நமக்கு முன்னால் வாழ்ந்து காட்டிய பெண்மை எவ்வாறு இருந்தது?

அவனோடு நான் வாழ்கின்ற இந்த வாழ்க்கை அவன் எனக்குத் தருகின்ற நட்புறவு, நட்பு என்றுதான் சொல்லப் பட்டது. கேண்மை என்றுதான் சொல்லப்பட்டது. அது அடிமைத் தனம் என்று சொல்லப்பட வில்லை.

காலத்தின் மாற்றத்தால் அப்படிப்பட்ட எண்ணங்கள் ஒருவேளை வந்திருக்கலாம்.

ஆனால், பழைய இலக்கியம் சொல்வது கணவனுக்கும், மனைவிக்கும் இடைப்பட்ட உறவு இருக்கிறதே இது நட்புறவு போல் இருக்கவேண்டும். கேண்மையாக இருக்கவேண்டும்

**எல்லை எது?**

அது எவ்வளவு பரந்து பட்டது? இதற்குமேல் எல்லையே கிடையாது, எல்லை சொல்ல முடியாத சில விஷயங்களைப் பேசுகின்றான் கலைஞன். அது நிலத்திலும் பெரியது என்றான். நிலத்தைவிட பெரியது என்று அதைச் சொல்ல முடியும். 'நிலத்தினும் பெரியது வானினும் உயர்ந்தது' – அதற்குமேல் எதுவும் உயர்வு இல்லையோ? அதை

அவனுடைய அன்பாக உவமையாக்கி- வானினும் உயர்ந்தது; நீரினும்- ஆறு அளவிலும், கடல் நீரினுடைய ஆழத்தை விடவும், இது ஆழமானது. எனவே, அகலத்திற்கும், உயரத்திற்கும், ஆழத்திற்கும் மூன்று கன பரிமாணங்களுக்கும் எதை எல்லையாகக் காட்டுகின்றோமோ அந்த எல்லையான அன்பை, எல்லையற்ற அன்பை அன்றைக்கு ஒரு பெண் உணர்கிறாள்.

பெருந்தேன் இழைக்கும் நாடனோடு நட்பு' என்றுதான் முடிப்பாளேயொழிய அது உறவு என்று மட்டும் நின்றுவிடுவதில்லை.

ஏதோ கணவன் மனைவியாக உடல் ரீதியாக அவர்கள் உறவு பெற்றுவிட்டார்கள் என்பதால் அது குடும்பம் என்று அமையவில்லை. அவர்களுக்குள்ளே நட்புறவு இருக்கவேண்டும். கொடுப்பதும், வாங்குவதும் என்பது பரஸ்பரம் நிகழ்கின்றபோதுதான் அந்தக் குடும்பம் சிறப்பாக அமைய முடியும் என்று மிகச் சிறந்த தத்துவத்தை அழகாகப் பண்டை இலக்கியங்களிலே, வாழ்ந்த தமிழ் மக்களுடைய வாழ்க்கை வழியாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

**ஜீவ ரகசியம்**

பெண்ணினுடைய இயல்பு என்ன தெரியுமா? தன்னோடு சேர்ந்தவனை எவ்வளவு முடியுமோ அவ்வளவு மேன்மைப்படுத்துவது!

நம்முடைய படைப்போ இரகசியமாகும். இந்தப் படைப்பின் இரகசியம் ஆண்மை என்பது, வலிமையானது பெண்மை என்பது மென்மையானது. இந்த இரண்டும் சேர்வதுதான் ஜீவ ரகசியம் என்பது.

ஆண் என்பவன் வலிமையானவனாகவே இருந்துவிடுவானேயானால், அவனுக்குள் வன்முறை உணர்வுகள்தான் தூண்டப்படுமேயொழிய அவனுக்குள் மென்மையான அல்லது சமுதாய உணர்வோ, ஆன்மீக உணர்வோ, ஒரு உயிர் நேயமோ எதுவுமே வருவதற்கு வாய்ப்பில்லை. இந்தப் பெண்மை இணைகிறபோது அது தானாகவே இளகிப் போய்விடுகிறது.

இந்தத் தத்துவத்தை எவ்வளவு எளிமையாக சங்கப் புலவன் சொல்கிறான்- "செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தன" என்கின்றான்; ஏதோ இரண்டு குடும்பங்கள் கலந்த கலப்பு அல்ல. இரண்டு பதவிகளுக்கிடையே ஏற்பட்ட கலப்பு அல்ல. இரண்டு பட்டங்களுக்கு இடையே ஏற்பட்ட பிணைப்பு அல்ல. இரண்டு செல்வந்தர்கள் குடும்பங்களுக்கிடையே ஏற்பட்ட ஒரு ஒப்பந்தம் அல்ல இது. அன்புடை நெஞ்சங்கள் கலந்தால் அதுதான் குடும்பம்.

> **நான் எதைச் செய்தேனோ, அதில் வெற்றி பெற்றேன். காரணம், நான் அதை உள்ள நிறைவோடு விரும்பினேன்.**
>
> **—நெப்போலியன்**

அப்படி கலக்கின்றபோது இந்தக் குடும்பத்தினுடைய விளைவு என்னவாகும் தெரியுமா?

**வாழ்வியல் உண்மை**

செம்புலம் என்பது வன்மையான நிலம். இந்த வலிமை நிறைந்த நிலம் அதில் விழுகின்ற நீர் இருக்கிறதே இது இந்த நிலத்தைப் பண்படுத்தி மென்மையாக்கி இளகச் செய்து பயிர் விளைவதற்கு ஏற்றதாக ஆக்குகின்றது. இதனால் நிலம் தன் இயல்பை இழந்துவிடுவதில்லை; நீரும் தன் இயல்பை இழந்துவிடுவதில்லை.

இரண்டும் சேருகின்றபோது இந்தச் சமுதாயம் பயன் பெறுகிறது என்று சொன்னால், அதுதான் அன்புடை நெஞ்சத்தின் கலப்பின் விளைவாக இருக்க வேண்டும். இதுதான் பெண்ணிற்குரிய பெருமையாக குடும்பம் அவளுக்கு அமைத்துத் தருவது என்பது சங்கத் தமிழ் மக்கள் கண்ட வாழ்வியல் உண்மை.

**சொர்க்கம் எந்த மூலை?**

இந்தப் பெண்ணிடம் சகல சக்தியும் இருக்கிறது என்பதை அனுபவ ரீதியாக அறிந்தவர்கள் நாம். தமிழகத்தில் இருந்து கொண்டு பேசுவதால், இந்த மண் உலகத்தில் இருந்து கொண்டு, விண் உலகத்துச் சொர்க்கத்தை எங்களால் இங்கே வரவழைக்க முடியும் என்று அறைகூவியவர்கள் தமிழ்ப் பெண்கள். இதை உணர்ந்ததால் தான் நம்முடைய வள்ளுவன் பாடினான்-

**'தாம்வீழ்வார் மென்றோள்**
**துமிலின் இனிதுகொல்**
**தாமரைக் கண்ணான் உலகு',**
—என்றான்.

எவ்வளவு அனுபவப்பட்டிருந்தால் அவர் அப்படிப் பேசுவார்!

நீ வைகுந்தத்துக்கு வா என்று யாரோ அவனை அழைத்தார்களாம். சொர்க்கம் சொர்க்கம் என்று ஒன்று உள்ளது. அங்கே எல்லா இன்பமும் உங்களுக்குக் கிடைக்கும். கவலையே இல்லாமல் வாழ்க்கையை நடத்தலாம். நரை, திரை, மூப்பு எதுவும் கிடையாது. மானுடத் துன்பங்கள் எதுவும் இல்லாத சொர்க்கத்திற்கு வா என்று அழைத்திருக்க வேண்டும் ஒரு தலைவனை; அல்லது நமது வள்ளுவனையே!

அவர் என்ன சொல்லுகின்றார்? சொர்க்கம் என்ன சொர்க்கம், இந்த மண் உலகத்திலே இந்த வாசுகி அம்மை எனக்கு ஒரு சொர்க்கத்தை ஏற்படுத்தித் தந்திருக்கின்றாள். அவளுடைய மென்மையான தோள்களில் துயில்கின்ற உணர்வு இருக்கிறதே, துய்க்கின்ற இன்பம் இருக்கிறதே இதற்கு நேராக வைக்கின்றபோது அந்தத் தாமரைக் கண்ணான் உலகு எந்த மூலைக்கு!

மண்ணில் இருந்துகொண்டே நான் சொர்க்கத்தை அனுபவிக்க முடியும் என்றால் உங்களுக்குச் சொர்க்கத்தைப் படைத்துத் தருபவள் இந்தப் பெண். அவ்வளவு சர்வ சக்தி படைத்தவள்.

**அறியாமை:**

**'அறியாமை இரகசியத்தின் தாய், துன்பத்தின் பிறப்பிடம், குருட்டு நம்பிக்கையின் அன்னை. சங்கடம் தோன்றிய இடம். அழிவும் வறுமையும் வாழ்ந்து வரும் தாயகம்'.**

**—இங்கர்சால்**

### சிலம்பும் செங்கோலும்

அதனால்தான் சிலம்பிலே சொல்லுவார், இவள் தொட்டிலை ஆட்டுபவள் மட்டுமல்ல, தொல்லுலகையும் ஆள்பவள் என்பதை இன்றைக்கு நம்முடைய புரட்சித்தலைவி நிச்சயமாகக் காட்டிக் கொண்டிருப்பது, எந்த அளவிற்கு உண்மையோ அந்த அளவிற்கு உண்மையை நம்முடைய இளங்கோவடிகள் காட்டினார்.

ஒரு பெண்ணின் காலிலே இருக்கின்ற சிலம்பு, ஒரு மன்னவன் கையில் இருக்கிற செங்கோலைப் பம்பரமாக ஆட்டிவைக்க முடிந்தது என்று சொன்னால், பெண் நினைத்தால் எதையும் சாதிப்பாள் என்பதுதானே பொருள்?

### பாரதியின் உச்சம்

எட்டையபுரத்திலே பிறந்த முறுக்குமீசை முண்டாசுக் கவிஞன், புரட்சிப் பெண்ணைக் குறிப்பிட்டு முதன் முதலில் குரல் கொடுத்தவன்- **'காதல் செய்யும் மனைவியே சக்தி கண்டீர், கடவுள் நிலை அவளாலே எய்தல் கூடும்'** -என்று பாடியவன் பராசக்தியிடம் போய் சில வரங்கள் கேட்கின்றான்.

வரங்கள் கேட்கிறபோது என்ன கேட்போம்? எவை எல்லாம் நமக்கு இல்லையோ அவற்றைக் கேட்போம். அவனோ வாழ்நாளில் வறுமையில் மிகவும் கஷ்டப்பட்ட ஒரு கவிஞன். அவன் கேட்டான்-

'காணி நிலம் வேண்டும்,
பராசக்தி காணி நிலம் வேண்டும்;
அந்தக் காணி நலத்திலே
ஒரு மாளிகை கட்டித் தரவேண்டும்.'

மிகவும் சிறிய ஆசைதான். ஒரே ஒரு வீடு வேண்டும். அவ்வளவுதான். ஆனால் அந்த ஆசையை வரிசையாக அடுக்கிக் கொண்டே போகிறபோது எந்த உச்சத்தை அந்தப் புலவன் தொட்டான் தெரியுமா?

பராசக்தியிடம் வேண்டுகின்றான்:

**'பாட்டுக் கலந்திடவே அங்கே**
**ஒரு பத்தினிப் பெண் வேண்டும்'**

எத்தனைச் செல்வங்கள் இருந்தாலும் பக்கத்திலே ஒரு பத்தினிப் பெண் இருந்தால்தான் எட்டையபுரத்துக் கவிஞருக்கும் பாட்டுக் கலக்கமுடியும் என்று சொன்னால், அவருடைய ஆற்றலை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அதனால்தான் என்ன சொன்னார் என்றால்-

**பாட்டுக் கலந்திடவே அங்கே**
**ஒரு பத்தினிப் பெண் வேண்டும்;**
**எங்கள் கூட்டுக் களியினிலே**
**கவிதைகள் கொண்டு**
**தரவேண்டும்.**
**எந்தன் பாட்டுத் திறத்தாலே**
**இவ்வையகத்தைப் பாலித்திட**
**வேண்டும்'**

—என்றான். நான் சமுதாயத்திற்குப் பயனுடைய ஒரு கவிஞனாக அமைய வேண்டுமென்றால் ஒரு பத்தினிப் பெண்

என் அருகே இருக்க வேண்டுமென்றான். அப்படியென்றால் இந்தக் குடும்பத்தினுடைய தலைமையிடம் எங்கே தரப்பட்டது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

அந்தக் கவிஞனின் வாரிசாகத்தான் இன்றைய கவிஞர் ஒருவர் பாடினார்- கவிஞர் மீரா அவர்கள் மிகவும் அற்புதமாக -இந்தக் கவிதையை மனதிலே வைத்துக்கொண்டு பாடுகின்றார்-

**பராசக்தி! எனது மூதாதை ஒருவன்,**
**பராசக்தியிடம் வரம் கேட்டான்.**
**காணி நிலம், மாட மாளிகை,**
**தென்ன்தோப்பு ...**
**அது இது என்று வேண்டி,**
**இறுதியில் ஒரு பத்தினிப்**
**பெண்ணை வேண்டினான்.**
**நான் கேட்டிருந்தால் உன்னை**
**மட்டுமே கேட்டிருப்பேன்!**
**ஏனென்றால் உன்னைப் பெற்றால்!**
**உலகத்தில் உள்ள**
**எல்லாம் பெற்ற மாதிரிதானே!'**

—ஒரு பத்தினிப் பெண்ணைத் துணையாக, ஒருவன் அடைவான் என்றால் எல்லாமே பெற்றதுபோல்தான். அதனால்தான்

**இல்லாள் அகத்திருக்க**
**இல்லாதது ஒன்றும் இல்லை**

—என்றார்கள். அவள் இருக்கிறபோது அந்தக் குடும்பத்தில் இல்லாமை என்பதே கிடையாது என்பதுதான் தமிழர் நாகரீகம்.

அதைத்தான் கவியரசர் கண்ணதாசன் சொன்னார். வாழ்க்கையில் அவர் பல பெண்களைச் சந்தித்தவர்; பல நிலையில் சந்தித்தவர்; பலசூழ்நிலைகளில் சந்தித்தவர். அவர் சொல்லுகிறபோது-

**'எத்தனைப் பெண்கள்**
**மண்ணின் இருந்தென்ன**
**சத்தியம் சம்சாரம் அவள்**
**சாமி அவதாரம்!'**

—என்பார் என்று சொன்னால் 'குடும்பம்' என்ற தலைப்பில்தான் இதை வைத்துப் பாட முடியுமே தவிர, அதற்கு அப்பாற்பட்ட நிலையில், எந்த நிலையிலும் காண முடியாது.

## பெண்மையின் மேன்மை

இந்தப் பெண்மை சிறப்புறுவது, தாய்மை ஆகிற பொழுதுதான். ஒரு முறை நேதாஜி அவர்கள் கல்கத்தா மேயராக இருந்தபொழுது, அப்பொழுது ஆட்சியில் இருந்த பிரிட்டிஷ் கவர்னர் ஒருவருக்கு விருந்து கொடுத்தாராம்.

அந்த விருந்திற்கு வந்த கவர்னர், சுற்றிப் பார்த்தார். பெரிய மேஜை இருந்தது. அலங்கார வண்ண விளக்குகள் எல்லாம் இருந்தன. 'பிளவர் வாஸ்' அது இது என்று எல்லாவற்றையும் பார்த்தார். மின் விளக்கைப் பார்த்தார். மேலே காற்றாடி- மின் காற்றாடி சுற்றிக் கொண்டிருக்கிறது. இத்தனையையும் பார்த்துவிட்டு அந்த கவர்னர் கேட்டாராம்,

'நேதாஜி, இந்த விருந்தை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். ஆனால் நான் பார்க்கிற ஒவ்வொரு பொருளும் எங்கள் நாட்டிலிருந்து உங்களுக்கு அறிமுகப்படுத்தப் பட்டது. மேலே சுழலுகின்ற

**சமாதானமும், சகிப்புத் தன்மையுமே நமது இலட்சியங்கள்.**

**—பண்டித ஜவகர்லால் நேரு**

மின்விசிறி, நாங்கள் வந்த பிறகு அறிமுகம் ஆன ஒன்று. இந்த இடத்தை ஒளிமயமாக்கிக் கொண்டிருக்கிற மின்சாரம் எங்களால் உங்களுக்கு வழங்கப்பட்டது. இங்கே இருக்கின்ற அத்தனைச் சௌகரியங்களையும் செய்து தந்தவர்கள் நாங்கள், இதில் உங்களுக்கு என்று சொல்லிக்கொள்வதற்கு என்ன இருக்கிறது?'' என்று கேட்டிருக்கிறார்!

அப்பொழுது நேதாஜி சொன்னாராம், "விருந்தினரை அவமரியாதை செய்வது எங்களுடைய பண்பாடு அல்ல. இதற்கு நான் பதில் சொல்ல விரும்பவில்லை!" என்றார்.

"இல்லை பரவாயில்லை, நான் அவமரியாதையாக அதை எடுத்துக்கொள்ள மாட்டேன், சொல்லுங்கள்" என்று மறுபடி மறுபடி அவர் வற்புறுத்தியதனால், நேதாஜி சொன்னார், ''கவர்னர் அவர்களே, எங்களுக்கு உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை, ஏன்- வாழ்வதற்கு மேலே கூரை கூட இல்லை. ஆனால் ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் கற்புள்ள ஒரு தாயின் பிள்ளை என்பதிலே நாங்கள் பெருமைப்படுகிறோமே, இது உங்களுக்கு இருக்கிறதா என்று நான் கேட்டால் அது அவமானப்படுத்தியது ஆகும்''. என்றார்.

ஏனென்றால், அவர் அம்மா நான்காவது கணவரோடு வாழ்ந்து கொண்டிருந்தார்.

அப்படி அவர் சொன்ன பொழுது, இந்த மாதிரி ஒரு பிரச்சினையை எழுப்பி இருக்க வேண்டாமோ என்று கவர்னர் ஜெனரலே நினைத்தார் என்று சொன்னால், அப்படிப்பட்ட கற்புடைய தாயின் பிள்ளைகள் என்பதால்தான் நாம் பெருமைப் படுகிறோம்.

**பெருமை பெற்ற நாடு**

அதனால்தான், இன்றைக்கு மேலை நாடுகள் எல்லாம் நம்மைப் பார்த்து வியக்கின்ற ஒரே ஒரு விஷயம் என்ன தெரியுமா? 20 ஆண்டுகள் வரையிலும் தனியாக வாழ்கின்ற ஒரு பெண், திடீரென்று முன்பின் தெரியாத ஒருவனோடு, இவன்தான் கணவன் என்று திருமணம் என்ற சடங்கால் இணைக்கப்பட்ட பிறகு, அவனுக்காகவே தன்னை மாற்றிக்கொண்டு வாழ்கிறாளே, அது எப்படி முடிகிறது? இந்த வாழ்க்கையை நிரந்தரமாக உங்களால் எப்படி வாழ முடிகிறது என்று கேட்கிறார்களாம்.

அதற்கு நம்மவர்கள் சொல்லுகின்ற பதில் என்ன தெரியுமா? எங்களுடைய பெண்கள் மனைவிகளாகவே வளர்க்கப்படுகிறார்கள். வளர்கின்ற காலத்திலேயிருந்தே அந்தப் பக்குவத்தை இவர்கள் பெற்றுவிட்டார்கள். இந்த நாடு அதனாலேயே பெருமை பெற்றிருக்கின்ற நாடு.

***- 1995 ஜனவரித் திங்களில், தஞ்சை மாநகரில், நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் பெண்ணின் பெருமை எனும் தலைப்பில் நடைபெற்ற மகளிர் கருத்தரங்கில் பங்கேற்று, குடும்பம் என்னும் பொருள் பற்றி ஆற்றிய உரை.***

இன்னும் சொல்லப் போனால், இந்தக் குடும்பம் என்பது இருக்கிறதே இதைத் தயவுசெய்து கூண்டு என்று நினைக்காதீர்கள். ஏதோ பெண் உரிமை என்பது வேறு. எது உரிமையில்லையோ அவற்றையெல்லாம் உரிமை என்று நினைத்துக்கொண்டு தவறு செய்வதும் இன்றைக்கு நாட்டிலே இருந்து கொண்டு தானிருக்கிறது. ஒவ்வொரு வெற்றி பெற்ற ஆணுக்கும் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள் என்பது எந்த அளவிற்குச் சத்தியமானதோ அதே அளவிற்கு- வெற்றி பெற்ற ஒவ்வொரு பெண்ணுக்குப் பின்னாலும் ஒரு ஆடவன் இருக்கிறான் என்பது உண்மையானது. இது ஒரு பரஸ்பரம். அவ்வளவுதான்.

அவர்களிடமிருந்து நாம் பெறுவதும் நம்மிடம் இருந்து அவர்கள் பெறுவதும் அது கணவனாகத்தான் இருக்க வேண்டும் என்று கட்டாயம் இல்லை.

**கூண்டும் கூடும்**

தந்தையால் ஒரு பெண் சிறப்புப் பெற்று இருக்கலாம். தமையனால் ஒரு பெண் மேன்மையான நிலையை அடைந்து இருக்கலாம். கணவனாலும் அடைந்திருக்கலாம். அதேமாதிரி தன்னுடைய மனைவியாலோ, தாயாலோ, வேறு பெண்ணாலோ ஒருவன் புகழ்பெற்ற நிலைக்கு வந்துவிடலாம். இது இரண்டுமே கொடுத்தலும், வாங்கலுமாக அமைவது. அதனால் தான் கூண்டு என்பது வேறு, கூடு என்பது வேறு என்று நான் சொல்ல விரும்புகின்றேன்.

கூண்டு என்றால் ஒரு கிளியைப் பிடித்து, அதன் இறகுகளை அறுத்துவிட்டு, உள்ளே அடைத்து, 'பொற் கூண்டுக்குள் இருக்கின்ற கிளியே, உனக்குப் பொற் கிண்ணத்திலே பால் சோறு தருகிறேன்' என்றால், அது மகிழ்ச்சி அடையப்போவது இல்லை. அப்படி ஒரு வாழ்க்கை அமையும் என்றால் அது குடும்பம் அல்ல. அன்புக்குத்தான் ஒரு பெண் ஆட்படுவாளே தவிர, அடிமைத்தனத்திற்கு நிச்சயமாக அவள் ஆட்படப் போவதும் இல்லை. அடிமைத்தனம் என்பது அச்சத்தை உருவாக்கலாம். அச்சம் காரணமாக நாம் சொல்லுவதற்கு எல்லாம் 'சரி' என்று சொல்லலாம். ஆனால் அன்பைப் பிரதிபலிக்கப் போவது இல்லை. அப்படி இருந்தால் அது குடும்பமும் அல்ல.

ஆனால் இரண்டு சிட்டுக் குருவிகள் சேர்ந்து கட்டுகின்ற கூட்டினைப்போல நம்முடைய தமிழ்க் குடும்பங்கள், அந்தக் குருவிகள் கட்டுகின்ற கூடுகள் போல் அமைவதால்தான், அதிலே அன்பிலே அரசாட்சி



தலைசிறந்த சமூகச் சீர்திருத்தவாதி !

தந்தை பெரியார் அவர்கள் இந்த நூற்றாண்டின் தலை சிறந்த சமூகச் சீர்திருத்தவாதி. ஈடிணையற்றத் தலைவர். பரிபூரணமான மனிதாபிமானி.

மனிதனை இழிவு செய்யும் தன்மைகளையும், பேதங்களையும், மூடநம்பிக்கைகளையும் எதிர்த்து இடையறாது புனிதப் போர் நடத்திய வீரர் அவர்.

மூடநம்பிக்கைகள் மனிதனுடைய அறிவை முடக்கி- அவனது முன்னேற்றத்தைத் தடுக்கின்றன என்பதை அவர் எடுத்துக்காட்டினார். சமூக அநீதிகளுக்கு எதிராகத் துணிவோடும் அப்பட்டமாகவும் குரல் எழுப்பியவர் அவர்.

தெளிவான தொலை நோக்குப் பார்வையுடனும், கொள்கைப் பிடிப்போடும், தம் காலத்துப் பொது வாழ்வில் மிகப் பிரம்மாண்டமான தோற்றத்துடன் தந்தை பெரியார் விளங்கினார்.

–டாக்டர் எம்.ஜி.ஆர்.

செலுத்திக் கொண்டிருக்கின்றாள் இந்தத் தமிழ்ப்பெண்.

அதனால்தான் பாரதிதாசன் சொல்லுவான் "இந்தக் குடும்பம் என்பது என்ன தெரியுமா? இரண்டு உடல்கள் சந்திக்கின்ற இடம் மட்டும் அல்ல; இரண்டு ஆன்மாக்கள் சந்திக்கின்ற இடம். இரண்டு அறிவு ஜீவிகள் சந்திக்கின்ற இடம். இந்த இடம் தான் புலவர்கள் திருக்குறளின் பொருள் ஆய்வதற்கு வகை செய்துவைத்த இடம்' என்றான்.


குடும்பம் என்பது வள்ளுவப் பேராசான் தந்த குறளை ஆய்வதற்கு உரிய இடம் என்று சொல்லுவோம் என்று சொன்னால், கோடீஸ்வர நாடுகள் இன்றைக்குத் தற்கொலை போன்ற நிலைகளிலே போய்க் கொண்டிருக்கிற பொழுது, நம்முடைய தமிழகம் பெருமைப் படுகிறது என்றால், அது இந்தக் குடும்பம் என்ற ஒரு அமைப்பினால் தான்.

அதனால்தான், நம் நாட்டுக் குடும்பங்களின் ஆணிவேராக, இந்தப் பெண் நிற்கின்ற காரணத்தினால் தான், பாரதிப் புலவன் பாடிச் சென்றான்

"எல்லோரும் அமர நிலை எய்தும் நன்முறையை இந்தியா உலகுக்கு அளிக்கும்; ஆம், இந்தியா உலகுக்கு அளிக்கும்; ஆம், ஆம் இந்தியா உலகுக்கு அளிக்கும்" என்றான். இத்தனை 'ஆம்' எதற்கு என்று நாம் பார்க்கின்றோம்.

மேலே பாடத் தெரியாமல் பாடியதையே மீண்டும் மீண்டும் பாடுபவனா பாரதி? இல்லை!

உலகம் அமர நிலை எய்தும் நிலையை, நன்முறையை இந்தியா உலகுக்கு அளிக்கும் என்றால் அந்த நன்முறைதான் குடும்பம் என்ற அமைப்பு. இதை கூண்டாகக் கருதுபவர்கள், அதில் தோல்வி அடைந்து விடுபவர்கள். குருவிகளின் கூடாகக் கருதி அதில் வெற்றி அடைவதற்கு இந்தப் பெண்ணே காரணம் ஆகின்றாள் என்ற உணர்வையும் நாம் பெறுவோம்! ★



### புதுக்கோட்டை மாவட்டத்தில்

# பல்துறைப் பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சி

புதுக்கோட்டைப் பொது அலுவலக வளாகத்தில் 1995 செப்டம்பர் 3 முதல் 11-ஆம் தேதி வரை பல்துறைப் பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சி, அரசின் சார்பில் மிகவும் சிறப்புடன் நடைபெற்றது.

நிகழ்ச்சியின் தொடக்க விழாவில், மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி, மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர்மீரான் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., புதுக் கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி. வரபிரசாத ராவ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

சிறுவர்கள் மகிழும் வண்ணம் அறிவியல் துறை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் அவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. புதுக்கோட்டை மாவட்டம், பல்வேறு துறைகளில் பெற்றுள்ள வளர்ச்சி ஒவ்வொரு அரங்குகளிலும் மிகவும் அருமையான முறையில் சித்திரிக்கப்பட்டு இருந்தது.

வேளாண்மைப் பொறியியல் துறை, ஊரக வளர்ச்சித்துறை, வனத்துறை, கூட்டுறவுத்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, மின் துறை, சுற்றுலாத்துறை, மருத்துவம், சுகாதாரம், குடும்ப நலம், வருவாய்த்துறை, அறிவொளி இயக்கம், கல்வித்துறை, தொழில்துறை, பொதுப்பணித் துறை, சமூகநலத்துறை, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, ஆதி திராவிடர் வீட்டுவசதித்துறை, (தாட்கோ), ஸ்டெப்ஸ் பெண்கள் முன்னேற்றக் குழு எனப் பல்வேறு துறைகளும் அரசின் பல திட்டங்கள், புள்ளி விவரங்களுடன் விளக்கப்பட்டிருந்தன.



## சிந்தனையாளர் அண்ணா!

**சிந்தனையாளர்- சிறந்த எழுத்தாளர்- சீரிய சொற்பொழிவாளர் என்ற முறையில் அவர் பெரும் சிறப்புக்கள் பெற்றிருந்த அதே நேரத்தில், தாய் மொழியாம் தமிழ் மொழி மீது கொண்டிருந்த நியாயமான பற்றின் காரணமாக, அவர் மக்களுடைய எண்ணங்களையும், இதயங்களையும் கவர்ந்தார்.**

**—காயிதெமில்லத் முகமது இஸ்மாயில்**

மேலும், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களிலும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு வீடியோ ஊர்தி ஒதுக்கீடு செய்து அவற்றின் மூலம், ஒவ்வொரு நாளும் மூன்று கிராமங்களில் அரசின் பல்வேறு சாதனைகளை விளக்கும் வண்ணம் வீடியோ படக்காட்சி நடத்தப்பட்டது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் குழந்தைகளுக்கு இலவச மருத்துவ பரிசோதனை, தடுப்பூசிப் போடுதல், கருவுற்ற தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து வழங்குதல், இலவசக் கண் பரிசோதனை, முதியோர் உதவித் தொகை பெற, தகுதியான நபர்களைத் தேர்வு செய்தல், வங்கிக் கடன் பெற ஆலோசனைகள் வழங்குதல், இலவச நிலப்பட்டா, மனைப்பட்டா வழங்க மனுக்கள் பெறுதல், மகளிர் மேம்பாட்டுத் திட்டப்பணிகள் மேற்கொள்ளுதல், ஏழைகளுக்கு இலவச மரங்கள் வழங்குதல், சுய தொழில் தொடங்குவோருக்குத் தக்க ஆலோசனைகள் வழங்குதல், குடும்பநலம், சிறு சேமிப்புப் பணியில் தக்க ஆலோசனை வழங்குதல், ஊனமுற்றோருக்கு உதவி வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல், கால்நடைகளுக்கு மருத்துவம் செய்தல் போன்ற பணிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

மேலும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் நாடகம், கலை நிகழ்ச்சி ஆகியவற்றின் மூலம், அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் எடுத்துரைக்கப்பட்டன.

பல்துறைப் பணி விளக்கக் கண்காட்சியைத் தொடங்கி வைத்த மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி பேசும்போது குறிப்பிட்டதாவது:

"ஒரு அரசு பல்வேறு சாதனைகளைச் செய்யலாம். பல்வேறு துறையின் மூலம் மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைத் தரலாம். ஒரு அரசு, மக்களுக்குத் தேவையான நல்ல பல திட்டங்களைத் தரலாம். துணைச் சாலைகளைத் தொடங்கலாம், தேவையான அனைத்தையும் பூர்த்தி செய்யலாம். ஆனால், இவை அனைத்தும் மக்களுக்குச் செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்துச் சொல்லுகின்ற துறைதான் இந்தச் செய்தித்துறை.

"இந்த அரசு என்ன செய்தது என்று கேட்பவருக்கு ஒரு நல்ல பதிலைச் சொல்லுகின்ற வகையில்தான், செய்தித்துறையின் மூலம் இந்தப் பல்துறைப் பணி விளக்கக் கண்காட்சி இங்கே அமைக்கப்பட்டுள்ளது.

"ஒவ்வொரு துறையிலும் முத்திரைப் பதிக்கின்ற வகையில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முழு அக்கறையும் கவனமும் எடுத்துக் கொண்டு இந்த நான்கு ஆண்டுக் காலத்தில் பெரும்பான்மையான தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளோம் என்று கூறிக்கொள்வதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்.

"புதுக்கோட்டை மாவட்டத்தை எடுத்துக்கொள்வோமேயானால், நீண்ட நாள் பிரச்சினை நல்ல குடிநீர் வேண்டும் என்பது. அந்தக் குடிநீர்த் தேவையை இரண்டே ஆண்டுக் காலத்தில் பூர்த்தி

செய்தது டாக்டர் புரட்சித் தலைவி அரசுதான்".

விழாவிற்கு த் தலைமையேற்று, பல்துறைப் பணி விளக்க முகாமினைத் தொடங்கிவைத்து மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டதாவது:

"இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டங்கள் இந்த மாநிலத்தில் நிறைவேற்றப் படுகின்றன. வளர்ச்சித் திட்டங்களாக இருந்தாலும் சரி, நலத் திட்ட உதவிகளாக இருந்தாலும் சரி, அல்லது இலவசத் திட்டங்களாக இருநதாலும் சரி, மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களாக இருந்தாலும் சரி, எந்தத் திட்டங்களாக இருந்தாலும் இந்தியத் துணைக் கண்டத்திற்கே அறிமுகப்படுத்தும் முதல் அமைச்சராகத் தமிழக முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

"எத்தனைத் திட்டங்கள் இந்த ஆட்சிக்காலத்தில் தீட்டப்படுகின்றது, திட்டத்தின் பயன் என்ன என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தீட்டப்படுகின்ற திட்டங்கள் எல்லாம் அடித்தள மக்களின் இதயங்களைத் தொட்டாக வேண்டும் என்பதற்காக இதுபோன்ற பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப்படுகின்றன.

"படித்துத் தெரிந்துகொள்வதைவிட, கேட்டுத் தெரிந்து கொள்வதை விட, கண்ணால் பார்த்தால் அது மனதில் நிலைத்து நிற்கும். பார்வை பட்டால் அது மனத்திரையில் நிலைத்து நிற்கும் என்ற வகையில் இப்படிப்பட்ட பல்துறைப் பணி விளக்கக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன".

விழாவிற்கு முன்னிலை வகித்து மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் பேசும்போது:

"புதுக்கோட்டையில் ரூபாய் 30 இலட்சம் செலவில் குளிர் சாதனப் பெட்டி வசதியுடன் 8 எட்டு அறைகளைக் கொண்ட தமிழ்நாடு சுற்றுலா விடுதி தமிழ்நாடு சுற்றுலாத்துறை மூலம் விரைவில் அடிக்கல் நாட்டப்பட உள்ளது" என்று குறிப்பிட்டார்.

விழாவில் விளக்கவுரையாற்றிய செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் குறிப்பிட்டதாவது:

"அரசின் நலத்திட்டங்கள் எல்லாம் அடித்தளத்தில் உள்ள மக்களுக்காக — ஏற்றமிகு திட்டங்கள் எல்லாம் ஏழை எளியோருக்காக என்ற நோக்கத்தோடு, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பல சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்துவதோடு, அவை எல்லாம் மக்களைச் சென்று அடைய வேண்டும். மக்களுக்கு இந்தத் திட்டங்கள் எல்லாம் தெரிய வேண்டும், என்ன திட்டங்களை நிறைவேற்றுகின்றோம் என்பதை அறிய வேண்டும் என்பதற்காக இந்த ஆண்டு இத்தகைய பல்துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சியை 10 மாவட்டங்களில் நடத்துவதற்கு உத்தரவிட்டுள்ளார்.

"இந்த ஆண்டு பல்துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சியினை முதன் முதலில் புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்."

விழாவிற்கு வருகைதந்த அமைச்சர் பெருமக்கள், அரசு அலுவலர்கள் ஆகியோரை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி. வரப்பிரசாத ராவ், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

துணை இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு மா. விஸ்வநாதன் நன்றியுரை கூறினார்.

திரைப்பட நடிகர் டைப்பிஸ்ட் கோபு நடித்த 'நல்லதே நடக்கும்' நாடகம், திரைப்பட நடிகர் பக்கோடா காதர் வழங்கிய 'நல்ல குடும்பம்' என்ற நாடகம், ஸ்ரீரங்கம் ரேவதி முத்துசாமி குழுவினரின் 'கந்தன் காவியம்' என்ற நாட்டிய நாடகம், சென்னை சுதாஸ் குழுவினரின் 'நீங்க நல்லா இருக்கணும்' நாடகம், திரைப்பட நடிகர் தில்லைராஜனின் 'வச்சகுறி தப்பாது' நாடகம், நேரு இளைஞர் மையம் வழங்கிய பல்சுவை நிகழ்ச்சி, நாட்டிய நிகழ்ச்சி மற்றும் 'அறிவொளி'யின் பள்ளி மாணவ மாணவியர் கலைநிகழ்ச்சி ஆகியவை அரசின் சாதனைகளை விளக்கும் வண்ணம் நடைபெற்றன.

# பெண்களுக்குப்

# பெரியார் தந்த சிறப்பு



**பெ**ண் ஆணைச் சார்ந்து வாழ வேண்டியவள் அல்லள் என்கின்ற முடிவான கருத்தைத் தம் முதலாகக் கொண்டிருந்த பெரியார் ஈ.வெ.ரா. தம் நாற்பத்தெட்டு ஆண்டு காலப் பொது வாழ்க்கையில், சொற்பொழிவை நிகழ்த்தத் தொடங்கும் முன் "சகோதரர்களே! சகோதரிகளே" என்றும், "தாய்மார்களே!" என்றும், பின்னாட்களில் "தோழர்களே, தோழியர்களே'' என்றும் விளித்தே பேசிவந்தார்.

**விதவைத் திருமணம்**

விதவைகட்கு மறுமணம் செய்து கொள்ளும் உரிமை வேண்டும் என்று வாதாடியவர் பெரியார் ஈ.வெ.ரா. அத்துடன் பல விதவைகளுக்குத் தாமே முன்னின்று மறுமணம் நடத்தி வைத்திருக்கிறார். அவர் வாழ்வில் நடந்த செயல் ஒன்று அறியத்தக்கது:

"என் தங்கை தன் இளம் வயதிலேயே ஒரு பெண் குழந்தையையும், ஒரு ஆண் குழந்தையையும் விடுத்து விண்ணுற்றாள். அவற்றுள் அம்மாயி என்று அழைக்கப் பெறும் அப்பெண் குழந்தைக்கு அதன் 10-வது வயதில் சிறந்த செல்வாக்கோடு ஒரு செல்லக் கலியாணம் செய்து வைத்தோம். கலியாணம் செய்த 60-வது நாள் அப் பெண்ணின் கணவன் என்னும் 13 வயதுள்ள சிறு பையன், பகல் 2 மணிக்கு "விஷபேதி" யால் விண்ணுற்றான். அவன் இறந்தான் என்ற செய்தியைக் கேட்டதும் அப் பெண் குழந்தை என்னிடம் ஓடிவந்து "மாமா! எனக்குக் கலியாணம் செய்துவை என்று நான் உன்னைக் கேட்டேனா? இப்படி என் தலையில் கல்லைப் போட்டாயே?'' என்று "ஓ" வென்று அலறிய சப்தத்தோடு என் காலடியில் அதன் மண்டையில் காய முண்டாகும்படி திடீரென்று விழுந்தது. துக்கம் விசாரிப்பதற்காக அங்கு வந்திருந்த ஆண், பெண் உட்பட சுமார் 600, 700 பேர்கள் அக் குழந்தையையும் என்னையும் பார்த்த வண்ணமாய்க் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வடித்தனர். எனக்கும் அடக்கவொண்ணா அழுகை வந்துவிட்டது. ஆனால் கீழே கிடந்த அந்தக் குழந்தையை நான் கையைப் பிடித்துத் தூக்கும் போதே, மறுபடியும் அதற்குக் கலியாணம் செய்து விடுவது என்கின்ற உறுதியுடனே தூக்கினேன்' என்கிறார்!

அதே உறுதியுடன் மறுமணத்தை வேற்றாரில் முடித்தும் வைத்திருக்கிறார். அதனால்-

எனது அப்பா அழாத குறையாய், "அவமானம் வந்து விட்டதே" எனத் தலையில் கைவைத்து உட்கார்ந்து விட்டார். எங்கள் அம்மாவோ தூக்கில் தொங்கவே போய் விட்டார்கள்.

ஊரில் பலர் கூடினார்கள்; ஒருமனதாகச் சாதி நீக்கம் செய்து விட்டார்கள். நாங்கள் மூன்று வீட்டாரும் நீக்கப்பட்ட ஆறு வருஷம் வரை சாதியிலிருந்து தள்ளப்பட்டு (உறவினர் விலக்கம்) இருந்தோம்.

—என்கிறார். ஆக, விலக்கப் படுவோம் எனத் தெரிந்திருந்தும் ஊராரால் விலக்கப்பட்டிருந்த ஒரு செயலைத் துணிகரமாகச் செய்து முடித்து வெற்றியும் பெற்றார் பெரியார்.

அரசியல், சமூகவியல், சீர்திருத்தவியல், பெண் மக்கள் முன்னேற்றம் என்றும் சொல்லிக் கொண்டிருக்கும் பெரும் பான்மை மக்கள், இவ்வாறு சொல்வதைத்; தங்கள் தனி நல வாழ்விற்கும், உயர் தனிப் புகழுக்கும் விளம்பரம் தேடவே ஓர் உறுதுணையாகக் கொள்கின் றனர்.

பெரியார் ஈ.வெ.ரா. இவ்வாறு பொது வாழ்க்கையில் இரட்டைவேடம் போடும் போலிப் பேச்சாளர்களை அழுத்தந் திருத்தமாகக் கண்டிக் கிறார்:

பெண் மக்கள் முன்னேற் றத்தைப் பற்றிப் பேசுவோர், தங்கள் வீட்டுப் பெண்களைப் படுதாவுக்குள் வைத்துக் கொண்டும், விதவை விவா கத்தைப் பற்றிப் பேசுவோர் தங்கள் குடும்பங்களிலுள்ள விதவைகளைக் காவல் போட்டு, விதவைத் தன்மை யைக் காப்பாற்றிக் கொண்டும் இருக்கிறார்களே தவிர, உண்மையில் ஒரு சிறிதும் நடவடிக்கையில் காட்டுவ தில்லை

—என்று குற்றஞ் சாட்டு கிறார். ஆனால், பெரியார் தங்கள் வீட்டுப் பெண்களைத் திரைக்குள் வைத்துக் கொள்ள வில்லை.

தம் மனைவி நாகம்மையார், தங்கை கண்ணம்மாள் இவர் களைப் பெண்கள் என்ற அடிமைக் கண்ணோட்டத்தில் அடைத்து வைக்காமல், தமக் குற்ற துணைவர்களாக எண்ணித், தம்முடன் பல போராட்டங்களில் கலந்து கொள்ள வைத்தார்.

**கள்ளுக்கடை மறியலில் பெண்கள் பங்கு**

*1921* -ஆம் ஆண்டில் நடை பெற்ற கள்ளுக்கடை மறியல் புகழ் பெற்றது. நவம்பரில் பெரியாரும், நண்பர்களும் சிறையேகினர். இச்சமயம் மறியலுக்கு நாகம்மையாரும், கண்ணம்மாளும் தலைமை தாங்கி நடத்தினர்; இவர்களைப் பின் தொடர்ந்த பெண்கள் பலர் மறியலிலும் கலந்துகொண்டனர்.

> **நீங்கள் துணிவு மிக்கவர் களாக விரும்பினால், அவ்வாறே நடக்க முயலுங்கள். உங்களுடைய முழுநோக்கத் தையும் அதே இலக்கை அடை வதற்காகப் பயன்படுத்துங்கள். அச்சம் இருந்த இடத்தில் துணிச்சல் குடிபுகுவதைக் காண்பீர்கள்.**
>
> **—வில்லியம் ஜேம்சு.**

இச்சமயம் பொதுவாகவே இந்தியாவில் நடந்து வந்த ஒத்துழையாமைக் கிளர்ச்சி சம்பந்தமாக, காங்கிரசுக்கும் அரசாங்கத்துக்கும் ஒரு சமா தான ஒப்பந்தப் பேச்சு நடை பெற்றது. இதற்காக, பம்பாயில் ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. அதற்குக் காலஞ் சென்ற சர் சங்கரன் நாயர் தலைவர். இம் மகாநாட்டின் பெயர் மாளவியா மகாநாடு. இம் மகாநாட்டின் நடவடிக்கை துவக்கப்படும் முன்பு திரு. பண்டிட் மாளவியா அவர்களும், சர். சங்கரன் நாயர் அவர்களும் மறியலை நிறுத்தி விட்டு நடவடிக்கை தொடங் கலாம்' என்று காந்தியாரைக் கேட்டுக் கொண்டார்கள். அப்போது காந்தியார்- 'மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை! அது ஈரோட்டிலுள்ள இரண்டு பெண்களிடம் இருக் கிறது. அவர்களைக் கேட்டாக வேண்டும்'

என்று பதிலுரைத்தார். இச் செய்தி, 19-1-22-ஆம் நாள் 'இந்து' பத்திரிக்கையில் வெளியிடப் பட்டிருக்கிறது. காந்தியார் இவ்வாறு சொன்னதற்குக் காரணம், ஈ.வெ.ரா.வின் மனைவி நாகம்மையார், அவரது தங்கை கண்ணம்மாள் ஆகிய இரு பெண்மணிகளும் மறிய லுக்கு முக்கியக் காரணமான வர்கள். ஆதலால் அவர்களின் கருத்தையறிந்த பின்பே முடிவு செய்ய வேண்டுமென்று கருதிக் கூறியதே ஆகும்.

**நாகம்மையாரும் வைக்கமும் போராட்டமும்**

பெரியார் சிறைப்பட்டதும்

நாகம்மையார் முக்கியப் பங் கெடுத்துக் கொண்டார். தமிழ் நாட்டிலிருந்தும், மலையாளத் திலிருந்தும் ஏராளமான பெண்கள் இக்கிளர்ச்சியில் பங்குகொண்டனர். ஒரு மாத மானவுடன் பெரியார் விடுதலை யானார். தடையுத்தரவை மீறியமையால், திரும்பவும் கைது செய்யப்பட்டு ஆறுமாதம் கடுங் காவல் தண்டனை விதிக்கப் பட்டுத் திருவாங்கூர்ச் சிறைக்குக் கொண்டு போகப்பட்டார்.



'அதன் பிறகு நாகம் மையார் தலைமை தாங்கிப் பல பெண்களுடன் திருவாங்கூர் முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து புரட்சியான பெருங் கிளர்ச்சியையுண்டாக்கி விட்டார். இறுதியில் சத்தியாக்கிரகம் வெற்றி பெற்றது'.

**இல்லப் பணிகள்**

இப்படிப் பல போராட்டங் களில், நாகம்மையார் ஆற்றிய பணி வரலாற்றுச் சிறப்பு மிக்க பணியாகும். நேரிடையாகப் போராட்டங்களில் கலந்து கொண்டது மட்டுமின்றி, பெரியாரின் உடல்நலத்தைக் கவனித்துக் கொள்வது, அவர் பணிகள் அனைத்திற்கும் ஆதரவு தருவது, கழகத் தொண்டர் களுக்கு உணவு படைப்பது போன்ற பலவற்றை அன்பு டனும், ஆதரவுடனும் செய்து வந்தவர் நாகம்மையார்.

**கழகப் பணியாற்றிய பல்வேறு பெண்கள்**

தோழியர்கள் டி.எஸ். குஞ்சிதம், மூவலூர் இராமாமிர் தத்தம்மாள், திருச்சி நீலாவதி, ஆர். அன்னபூரணி, இந்திராணி பாலசுப்பிரமணியம், காரைக்குடி எஸ். விசாலாட்சி போன்ற பல பெண் மக்களும் இயக்கத்திற்காக உழைத்து வந்தனர்.

*13.11.1938*-இல் சென்னை யில் 'தமிழ்நாட்டுப் பெண்கள் மகாநாடு' கூடிற்று. திருவாட்டி நீலாம்பிகை அம்மையார் (மறைமலையடிகள் திருமகள்) இதன் தலைவர். இம் மகாநாட் டின் பயனாகப் பெண்களும் மறியல் செய்ய புகுந்தனர். தோழியர்கள் டாக்டர் தருமாம் பாள், மூவலூர் இராமா மிர்தத்தம்மாள் முதலிய வீராங்கனைகள் மறியல் செய்தனர்; சிறை புகுந்தனர்.

"ஆசிரியர் ஈ.வெ. ராமசாமி நாயக்கர்" எனக் குறிப்பிட்டு வந்ததை மாற்றி *25.12.1927* 'குடி அரசு' மலர் முதல் 'ஆசிரியர் ஈ.வெ. ராமசாமி' என்று மட்டும் குறிப்பிட்டு, தம் பெயருக்குப் பின்னால் இருந்த நாயக்கர் என்ற பட்டத்தை நீக்கிவிட்டார். அது முதல் மற்றவர்கள் 'நாயக்கர்' என்ற சொல் இருந்த இடத்தில் பெரியார் என்ற சொல்லை முதன் முதலாகச் சேர்த்தார்கள்.

**பெண்கள் மாநாடு**

*12, 13,11.1938*-இல் தமிழ் நாட்டுப் பெண்கள் மாநாடு ஒற்றைவாடை அரங்கில் நடை பெற்றது. அவர்கள் நிறை வேற்றிய முதல் தீர்மானம்:

**இந்தியாவில் இதுவரையும் தோன்றிய சீர்திருத்தத் தலை வர்கள் செய்யவியலாமல் போன வேலைகளை இன்று நமது தலைவர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் செய்து வருவதாலும், தென்னாட்டில் அவருக்கு மேலாகவும், சமமாகவும் நினைப்பதற்கு வேறொருவர் இல்லாமையா லும், அவர் பெயரைச் சொல் லிலும், எழுத்திலும் வழங்கும் போதெல்லாம் 'பெரியார்' என்ற சிறப்புப் பெயரையே வழங்குதல் வேண்டுமென இம்மாநாடு எல்லோரையும் கேட்டுக் கொள்கிறது.** (விடுதலை *16, 11, 1948*).

அந்த அறிவிப்பு தொல் வழக்கப்படி வேண்டுகோள் தன்மையிலும், ஏற்கெனவே வழக்கத்தில் இருந்த பெயரை விளம்பரப்படுத்தும் தன்மை யிலும் அமைந்தது. எப்படி இருப்பினும், பெரியார் என்று அழைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்ற தீர்மானம், பெண்களால்தான் போடப்பட்டது என்ற சிறப்பு என்றும் பெண்களையே சாரும்.

**மாநாடுகளுக்கு அழைத்து வருதல்**

கோயிலுக்கும், திருமணம் மற்றும் முக்கிய நிகழ்ச்சி களுக்கும் மட்டுமே போய்வரும் பழக்கத்தை உடையவர்களாக மாறிப் போயிருந்த தமிழ்ப் பெண்டிரை-

பொதுக் கூட்டங்களுக்கு அழைத்து வருவது, மாநாடு களுக்கு அழைத்து வருவது என்ற வழக்கத்தைத் தமிழ்நாட்டில் புகுத்தியவர் ஈ.வெரா. அவர்களே யாவார்.

புரட்சி வழியில் செலுத்தும் புது வழக்கத்தை உண்டாக்கி விட்ட பெரியார் அவர்கட்குப் பெண்ணினம் நன்றிக்கடன் பட்டுள்ளது.

**மனைவிக்குத் தந்த மதிப்புரை**

நாகம்மாள் இறப்பிற்காக வருந்திப் பெரியார் பின்வரு மாறு எழுதுகிறார்:

**'நாகம்மாளை 'மணந்து' வாழ்க்கைத் துணையாகக் கொண்டு 35 வருட காலம் வாழ்ந்துவிட்டேன். நாகம் மாளை நான்தான் வாழ்க்கைத்** துணைவியாகக் கொண்டு இருந்தேனயல்லாமல் நாகம் மாளுக்கு நான் வாழ்க்கைத் துணையாக இருந்தேனா என்பது எனக்கே ஞாபகத்திற்கு வரவில்லை. நான் சுயநல வாழ்வில் 'மைனராய்' 'காலி யாய்' 'சீமானாய்' இருந்த காலத்திலும், பொதுநல வாழ் வில் ஈடுபட்டுத் தொண்ட னாய் இருந்த காலத்திலும் எனக்கு வாழ்வின் ஒவ்வொரு துறையின் முற்போக்குக்கும் நாகம்மாள் எவ்வளவோ ஆதாரமாய் இருந்தார் என்பது மறுக்க முடியாத காரியம்'.

—உணர்ச்சி வசப்படாத பெரியார் இந்த அளவுக்கு உருகி எழுதுகிறார். நாகம்மையார் அந்த அளவிற்கு உயிர்த் துணையாய் அவர் வாழ்க்கை யில் பங்கு பெற்றிருந்த பாங்கு புலனாகும்.

உண்மையை மறைக்காமல் உரைக்கும் பெரியார், தம் வார்த்தைகளால் இழக்க முடி யாத இன்னுயிர்த் துணைவரை இழந்த அவலத்தின் ஊடுருவல் தெள்ளிதின் விளங்குகிறது.

நாகம்மாள் உயிர் வாழ்ந் ததும், வாழ ஆசைப்பட்டதும் எனக்காகவே ஒழிய தனக்காக அல்ல என்பதை நான் ஒவ் வொரு விநாடியும் நன்றாய் உணர்ந்து வந்தேன்.

—நாகம்மாள் மறைந்தது எனக்கு ஒரு....

அடிமை போயிற்றென்று சொல்லட்டுமா?

ஆதரவு போயிற்றென்று சொல்லட்டுமா?

இன்பம் போயிற்றென்று சொல்லட்டுமா?

உணர்ச்சி போயிற்றென்று சொல்லட்டுமா?

ஊக்கம் போயிற்றென்று சொல்லட்டுமா?

எல்லாம் போயிற்றென்று சொல்லட்டுமா?

எதுவும் விளங்க வில்லையே!!'

என்பதாகக் குமுறிக் கூறு கிறார். வாழ்க்கையில் சிறப்பிடம் பெற்றிருந்த, நாகம்மையார், பெரியார் உள்ளத்திலும் உயரிய ஒரு சிறப்பிடத்தையே பெற்றிருந் தார்.

**ஊர்வலத்தில் பெண்கள்**

தாம் நடத்துகின்ற ஊர்வலங் களில் பெண்களை முதலில் நிறுத்தி, முதன்மைச் சிறப்பு நல்குதல் அவர் பழக்கம். வீட்டுக்கு வெளியே வந்து தெருவில் நின்று வேடிக்கை பார்ப்பதே பெருங் குற்றமாகக் கருதப்பட்ட எண்ணப் போக்கைக் காலப் போக்கில் கரைத்து மாற்றியவர்- ஊர்வலங்களில் பெண்களைக் கலந்து கொள்ள

**எது வேண்டுமென்று திட்ட வட்டமாக எண்ணி விட்டீர் களேயானால், அப்பொழுதே பாதி நிறைவேறியது போல் ஆகிவிடும். வெற்றி பெற வேண்டும் என்ற உங்களுடைய திடமான எண்ணம்தான் வேறு எதனையும்விட மிகமுக்கிய மானதாகும்.**

**—ஆப்ரகாம் லிங்கன்**

வைத்ததன் மூலம் பெரும் புரட்சி செய்தார்.

தனிப்பட்ட முறையில் பேசும் போதுகூட பெண்களை மிகுந்த மரியாதையுடன் அழைப்பாராம்.

பொம்முச் செட்டித் தெரு, சென்னை-2 என்ற முகவரியுடைய தங்கள் இல்லத்தில், தம் துணைவர் திரு சி.டி.டி. அரசு அவர்கள் அழைப்பின் பேரில் ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுக் காலம் பெரியார் தங்கியிருந்த போது, அவர் அன்புடன் அழைப்பதையும், பாசம் காட்டிப் பேசுவதையும் நினைவுகூர்ந்து நெஞ்சம் நெகிழ்ந்தார் திருமதி கண்ணாம்பா அரசு.

'காலையில் இட்டலிகளை ஒரு தட்டில் வைத்து, சிறு கிண்ணத்தில் மீன் குழம்பையும் வைத்து, பலகாரம் சாப்பிட வந்தமர்ந்த பெரியார் முன்னால் பரிமாறினேன். ஓரிரு துண்டுகள் சாப்பிட்டார். "அம்மாதான் இப்படி வைப்பாங்க அவங்க வைக்கிற குழம்பு மாதிரியே இருக்குது" எனக் கூறிக் கண் கலங்கினார். ஒருவேளை, தன் தாயாரைப் பற்றிச் சொல்லுகிறார் போலும் என்று நான் நினைத்துக் கொண்டேன். பிறகுதான் அவர் 'அவங்க' என்றும் 'அம்மா' என்றும் மரியாதையாக அன்போடு குறிப்பிட்டது தன் மனைவியார் நாகம்மையாரை என்று தெரிந்தது'.

—என்றார் திருமதி கண்ணாம்பா அரசு.

பெண்களுக்குப் பெயர் வைக்கும்போது ருஷ்யா, பகுத்தறிவு, மிராண்டா என்றெல்லாம் பெயர் சூட்டி அதிலும் ஒரு புரட்சி செய்தார், அவர்.

## இறுதிச் சொற்பொழிவு

19.12.73 அன்று சென்னைத் தியாகராய நகரில் நடந்த கூட்டமே இறுதிக் கூட்டம். அங்குப் பேசும்போது,

'நீங்கள் விஷயங்களைத் தீவிரமாகக் கவனிக்கணும்... மளமளவென்று வரணும், ஆண் பிள்ளைகள் வரமுடியலை என்றால் அவர்கள் வீட்டுப் பெண் பிள்ளைகளை அனுப்புங்கள்; அனுப்ப முடியவில்லை என்றால் வேலைக்கு இரண்டு ஆளைப்பிடித்து அனுப்புங்கள் 'நீ போ எனக்காக' என்று.

—என்று குறிப்பிட்டார்.

இறுதிச் சொற்பொழிவிலும் கூட, பெண்கள் இயக்கப் பணிகளைக் கவனிக்க தீவிரமாகச் செயல்பட அழைக்கப்படுகிறார்கள். பெரியார் சிந்தனைகளில் பெண்கள் முதன்மை இடத்தைப் பெற்றிருந்தார்கள். இந்த நாட்டிற்காக அவர் என்னென்ன செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டாரோ, அந்த ஆசைகளில் எல்லாம் பெண் விடுதலையும் ஓர் ஊடுபொருளாகவே விளங்குகிறது.

(பேராசிரியை அரசு மணிமேகலையின்- 'பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகளில் பெண்கள்' என்ற நூலிலிருந்து).

### நல்ல சனநாயகவாதி !

அரசியலோடு நாகரிகத்தை - அரசியலோடு நாணயத்தை - அரசியலோடு நல்ல நோக்கத்தை - அரசியலோடு சனநாயகத்தை - அரசியலோடு உயர்ந்த பண்பாட்டை - இணைத்துத் தந்த நல்ல சனநாயகவாதி பேரறிஞர் அண்ணா அவர்கள்.

—டாக்டர் எம்.ஜி.ஆர்.





தங்களின் தோட்டங்களில் விளையும் இலவம், நார்த்தை, எலுமிச்சை, மா, பலா, வாழை, கரும்பு போன்ற விளைபொருட் களை விற்பனை செய்யவும், தங்களின் உடல் நலம் குன்றிய போது சிகிச்சை பெறவும், இவர்கள் கரடுமுரடான மலைப்பாதையில் செல்லவேண்டியுள்ளது.

இம் மலைவாழ் மக்கள் தங்கள் குறை களை மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர், திரு இரா. சம்பத், இ.ஆ.ப. அவர்களின் கவனத்திற் குக் கொண்டு வந்தனர். மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடி நடவடிக்கையாக, ஊத்துக்காடு மலைக்கிராமத்திற்கு, **3.9.95**

# மலைவாழ் மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி

**ம**துரை மாவட்டம் பெரியகுளத்தை அடுத்துள்ள மேற்கு தொடர்ச்சி மலைகளில் சோத்துப்பாறை என்ற மலையடிவாரத்திற்கு மேல் சுமார் 2,700 அடி உயரத்தில் 3,500 மலைவாழ்மக்கள் வாழ்ந்து வருகின்றனர். குறவன் குழி, சின்ன மூங்கில், பெரியமூங்கில், ஊத்துக்காடு, ஊரடி, சுப்பிரமணியபுரம், கரும்பாறை, தாயோன்கானல், பேச்சியம்மன் பாறை, துருவம் போன்ற பல கிராமங்களில் இவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அந்நியரின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றும் இப்பகுதி வாழ் மக்களுக்கு ஏற்படாத விடியல், 48 ஆண்டு களுக்குப் பின்பு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில் ஏற்பட்டுள்ளது.

அன்று, பெரியகுளம் தொகுதி நாடாளு மன்ற உறுப்பினர் திரு ஆர். ராமசாமி, போடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு வெ.பன்னீர் செல்வம் மற்றும் வன அலுவலர்கள் ஆகியோருடன் சென்றார். ஏறத்தாழ நான்கு மணி நேரம் செங்குத்தான 2,700 அடி உயரமுள்ள மலைப்பகுதியில் அனைவரும் நடைப்பயணம் மேற் கொண்டனர்.

மலைவாழ் மக்களிடையே மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசுகையில், "சோத்துப்பாறையிலிருந்து ஊத்துக்காடு கிராமத்திற்கு 14 கி.மீ. தூரத்திற்குச் சாலை வசதி ஏற்பாடு செய்ய சுமார் ரூ.30 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. முதற்கட்டப் பணியான ரூ.10 லட்சம் ஒதுக்கீடு



# அண்ணா!

—பாவலர் பாக்கிய மணாளன்

தித்திக்கும் தேன்பாகில் செந்தமிழைச் சேர்த்தெடுத்தே
எத்திக்கும் ஈந்திட்ட ஈடில்லா - வித்தகராம்
பேரறிஞர் அண்ணாவின் பேராற்றல் கண்டிங்கே
சீராளர் என்றார் சிறந்து!

தந்தை பெரியாரின் தானைத் தலைவராய்
சிந்தனைச் செல்வராய் சீர்திருத்த - வேந்தராய்
பல்லோரும் போற்றும் பகுத்தறிவுப் பாசறையாய்
நல்லறிவோ டேகினார் நன்று!

சென்னையெனும் மாநிலத்தைச் செந்தமிழ் நாடென்று
மன்றத்தில் மாற்றியவர் வைத்ததாலே - மன்பதையில்
மாற்றாரும் பல்லாண்டு வாழ்கவென்று வாழ்த்திமிங்கே
ஏற்றமுடன் ஏற்றார் இனிது!

கோடைவீச் சென்றாலும் கொட்டுமழை என்றாலும்
வாடைவீச் சென்றாலும் வாடாமல் - மேடைதேடி
அண்ணாவின் பேச்சென்றால் ஆவலாய் ஓடிவந்தே
எண்ணத்தில் வைத்திட்டார் ஏற்று!

அழகு நடிப்பால் அடுக்கு மொழியால்
பழகும்நற் பண்பால் பரிவின் - அழகால்
கனிந்த அறிவால் கவர்ந்த பலரும்
புனிதரெனப் போற்றினர் பூத்து!

---

செய்யப்பட்டு பணி தொடங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்குள் இச்சாலைப் பணி முடிக்கப்படும்" என்று தெரிவித்தார்.

மேலும், கடந்த **24.9.95** அன்று சோத்துப் பாறையை அடுத்து 12 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள அகமலைக் கிராமத்திற்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இரா. சம்பத், இ.ஆ.ப. அவர்கள் நடைப்பயணம் மேற்கொண்டு ரூ.10 இலட்சம் செலவில் சாலை அமைக்கும் பணியையும் தொடங்கி வைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அத்துடன், முதியோர் ஓய்வூதியம், குடும்ப அட்டை முதலானவை குறித்துக் கொடுக்கப் பட்ட மனுக்கள் மீதும் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதி கூறினார்.



# காமராசர் மாவட்டத்தில் பல்துறைப் பணி விளக்க முகாம்

**கா**மராசர் மாவட்டம், விருதுநகரிலுள்ள ஆட்டுச் சந்தைத் திடலில், பல்துறைப் பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சி 11.9.95 முதல் 17.9.95 வரை நடைபெற்றது.

11.9.95 அன்று பல்துறைப் பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சியை, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் விழாத் தலைமை யேற்றுத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

"ஒரு ஆட்சி எப்படி நடத்தப் பட வேண்டும், ஒரு முதல மைச்சர் எத்தகைய வேகத்தில் செயல்பட வேண்டும் என்று தெரிந்து கொள்ளத்தான் இந்தப் பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப்படுகின்றன. ஒரு அரசாங்கம் தீட்டும் திட்டம் மக்களுக்குக் கிடைக்க வேண்டும். அந்தத் திட்டத்தைப் பற்றி மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அந்தப் பணி இந்தப் பல்துறைப் பணி விளக்க முகாம் மூலம் செயல்பட்டு இருக்கிறது. உல கத்திற்கே எடுத்துக்காட்டாக அற்புதமான திட்டங்களை எல்லாம் புரட்சித்தலைவி செயல்படுத்திக் கொண்டிருக் கிறார். தீர்க்கதரிசனத்தோடு, தொலைதூரப் பார்வையோடு நினைத்ததை முடித்துக் காட்டு கிற முதலமைச்சராக இருக் கிறார். வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டங்கள் இந்த மாநிலத்தில் நிறைவேற்றப் படுகின்றன.

"19 போக்குவரத்துக் கழகங்களை அரசு நடத்தி வருகிறது. வேறு எந்த மாநிலத்திலும் இதுபோல கிடையாது. 16,000 பேருந்துகள் தமிழ்நாட்டில் அரசுக்குச் சொந்த மாக இருக்கிறன. பொது உடைமையைக் கட்டி ஆளும் மேற்கு வங்காளத்தில் கூட இது இல்லை. போக்குவரத்துத் தொழி

லாளர்களுக்குப் பென்சன் திட்டத்தைக் கொண்டு வந்தது தமிழ்நாட்டில் தான்.

"ஒரு கோடியே இருபது இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.70 கோடி மதிப்புள்ள இலவச வேட்டி, சேலை வழங்கப் பட்டது. இப்போது மீனவர் களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப்படும் என்று புரட்சித் தலைவி அறிவித்து இருக்கிறார். புரட்சித்தலைவியின் சிந் தனைகள் அனைத்தும் செயல் ஆகிறது. செயல்கள் சாதனை ஆகிறது. அந்தச் சாதனைகள் சகாப்தம் ஆகிறது."

பல்துறைப் பணி விளக்கக் கண்காட்சியை, மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு வி.சத்தியமூர்த்தி அவர்கள் தொடங்கி வைத்தார். அப்போது அவர் கூறியதாவது:

"இதுபோன்ற கண்காட்சி களை நடத்துவதன் மூலம் அரசாங்கத்திற்கு மக்களைச் சந்திக்கின்ற தைரியம் இருக்கிறது. 4 ஆண்டுகளாக நாங்கள் எதுவும் செய்யவில்லை என்றால், இந்த விழாவை நாங்கள் நடத்த முடியாது. காமராசர் மாவட்டத் தில் இருந்த ஒரே அணை, பிளவக்கல் அணை தான். அதற்குப் பிறகு குல்லூர்ச்சந்தை, கோல்வார்பட்டி, ஆணைக் குட்டம், வெம்பக்கோட்டை அணைகள் கட்டப்பட்டிருக்கிறன. இப்போது இருக்கன்குடி அணை கட்டப்படவுள்ளது".

விழாவில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு சஞ்சய் ராமசாமி, அருப்புக் கோட்டை சட்டமன்ற உறுப் பினர் திருமதி வி.ஜி. மணி மேகலை, காமராசர் மாவட்டப் பால்வளத் தலைவர் திரு க. சுந்தரபாண்டியன், மாவட்ட நுகர்வோர் நீதிமன்ற உறுப்பினர் திருமதி. சக்தி கோதண்டம் ஆகி யோர் பேசினார்கள்.

காமராசர் மாவட்ட வருவாய் அலுவலர் திரு ஆர். வீரராகவன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இறுதியில், செய்தி-மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு மா. விசுவநாதன் அவர்கள் நன்றி கூறினார்.

கண்காட்சியில் அரசின் சாதனை குறித்த விளக்கப் படங்கள், திட்டங்கள் குறித்த மாதிரிகள், அரசின் நலத்திட்ட உதவிகள் குறித்த கையேடுகள் பொதுமக்களுக்கு வழங்கப் பட்டன.

காமராசர் மாவட்டத்தின் 11 ஊராட்சி ஒன்றியங்களிலும் தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, சிறுசேமிப்பு, வரதட்சணை ஒழிப்பு, முதியோர் கல்வி, சுற்றுப்புறச் சூழல் ஆகியவை பற்றி வீடியோ படம் மூலம் பொதுமக்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது. தினசரி அரசின் சாதனை குறித்த நாடகங்கள், கலைநிகழ்ச்சிகள், பட்டி மன்றங்கள், மாவட்டம் முழு வதும் நடைபெற்றன. கண்காட்சி நடைபெற்ற இடத்தில் தினசரி இன்னிசை நிகழ்ச்சி, பட்டி மன்றம், நாடகங்கள் நடத்தப் பட்டன. மருத்துவப் பரி சோதனை, இலவசக் கண்காட்சி முகாம், கடன் உதவி ஆலோ சனைகள், மகளிர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள், இலவச மரக்கன்று வழங்குதல், குடும்ப நலம், கால்நடை மருத்துவம் ஆகியவை அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் நடைபெற்றன.

**என்னுடைய வீட்டின் நாலா மருங்கிலும் சுவரெழுப்பப் பட்டு, என்னுடைய ஜன்னல் கதவுகள் அடைக்கப்படுவதை நான் விரும்பவில்லை. பல விதமான மண்வாசனைகளும், கலாச்சார நறுமணங்களும் என் வீட்டில் புகுவதையே நான் விரும்புகிறேன். ஆனால், அவை என்னை நிலைபெயரச் செய்ய நான் இடம் கொடுப்ப தில்லை.**

**—அண்ணல் காந்தியடிகள்**


17.9.95 அன்று பல்துறைப் பணி விளக்கக் கண்காட்சியின் நிறைவு நாள் விழா, காமராசர் மாவட்ட ஆட்சியர் திரு வ. கனகராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கொண்டாடப் பட்டது. இவ்விழாவில் அருப்புக் கோட்டை சட்டமன்ற உறுப் பினர் திருமதி வி.ஜி. மணி மேகலை, காமராசர் மாவட்ட பால்வளத் தலைவர், திரு க. சுந்தரபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவில் சிறந்த அரங்கு அமைத்த நிறுவனங்களுக்கு, காமராசர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

**அரசுத் துறை**

1. ஊரக வளர்ச்சித் துறை- முதல் பரிசு.

2. வேளாண்மைப் பொறி இயல் துறை - இரண்டாம் பரிசு.



# அறிவுச் சுரங்கம்

## -மாண்புமிகு முதல்வர்

தந்தை பெரியாரது வாழ்க்கை வரலாறு ஒரு பயன் மரம். பலரும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய அனுபவச் சுரங்கம். இறக்கும்வரை சமூக மேம்பாட்டிற்காக உழைத்த ஒர பெரிய தலைவர் நம்மிடம் உண்டென்றால் அது தந்தை பெரியார் தான்.

பெண்கள் முன்னேற்றத்தைப் பற்றிப் பேசி அதற்காக உழைத்த உலகத் தலைவர் களின் வரிசையில் தந்தை பெரியார் அவர்களுக்கு முதலிடம் என்றைக்குமே உண்டு என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்.

நமக்கெல்லாம் மகிழ்ச்சி தருகிற மற்றொரு செய்தி, பெரியார் என்கிற சிறப்புப் பட்டம் 1938-இல் சென்னையில் நடத்தப்பட்ட தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில்தான் அவருக்கு வழங்கப் பட்டது.

ஒரு பெரியாரைக் கண்டுபிடிப்பதில் ஆண்களைவிடப் பெண்களுக்கு எப்படிப் பட்ட தொலைநோக்கு எண்ணம் இருந் திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும் போது இன்றும் மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கிறது! அதுவும் தமிழ்நாட்டுப் பெண்களுக்குத் தலைவர் களைத் தேர்ந்தெடுப்பதில் இருக்கிற சாதுரியம், வேறு எந்த மாநிலப் பெண் களுக்கும் இல்லை என்றே கூற வேண்டும்.

ஒரு பெண்ணை முதலமைச்சர் ஆக்கி யிருக்கிற தமிழகத்தின் பெருந்தன்மைக்கு, தொலைநோக்குப் பார்வைக்கு, அரசியல் துணிவுக்கு, தந்தை பெரியாரின் பெண்ணடிமை ஒழிப்புக் கருத்துக்களே உரமாய், ஊக்கமாய் இருந்துள்ளன என்பதை எவரும் மறுத்திட இயலாது.

'புரட்சித்தலைவியின் முழக்கம்'
தொகுதி-1-லிருந்து

---

**அரசுத் துறை சார்ந்த நிறுவனங்கள்.**

1. மின் வாரியம் - முதல் பரிசு.

2. பாண்டியன் போக்கு வரத்துக் கழகம் - இரண்டாம் பரிசு.

3. வனத்துறை - மூன்றாம் பரிசு.

**தனியார் துறை**

1. மெட்ராஸ் சிமெண்ட்ஸ் - முதல் பரிசு

கண்காட்சியில் கலந்து கொண்ட அனைத்துத் துறை களின் அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சான்றிதழ் வழங் கினார்கள். விழாத் தொடக் கத்தில் காமராசர் மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு மு. பிச்சையா அவர்கள் அனைவரையும் வர வேற்றார். விழா இறுதியில், விருதுநகர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு வேண்டியான், நன்றி கூறினார்.



# குற்றாலத்தில் குதூகலச் சாரல் விழா!

குற்றாலச் சாரல் திருவிழா **26.8.95** அன்று மாலை குற்றாலத்தில் உள்ள கலைவாணர் கலை அரங்கில் தொடங்கி வைக்கப் பெற்றது.

இவ்விழாவிற்கு மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர்மீரான் அவர்கள் தலைமை ஏற்றார். மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்கள் சாரல் திருவிழாவைத் தொடங்கி வைத்து, சுற்றுலா வளாகத்திற்கு அடிக்கல் நாட்டிப் பேருரை ஆற்றினார்.

நெல்லை கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு வி.கு. ஜெயக்கொடி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். சுற்றுலாத்துறை இயக்குநர் திரு வி. குணாளன், இ.ஆ.ப., அவர்கள் திட்ட விளக்கவுரை யாற்றினார். நாடாளுமன்ற உறுப்பினர் திரு எஸ். தங்கராஜபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பி. தர்மலிங்கம், திரு ஆர். முருகையா பாண்டியன், திரு டி. வேலையா, நெல்லை சிதம்பரனார் மாவட்டப் பால்வளத் தலைவர் திரு கே.ஆர்.பி. மணிமொழியன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். விழா முடிவில், கலைமாமணி குன்னக்குடி வைத்தியநாதனின் வயலின் இசை நிகழ்ச்சியும், மதுரை நர்த்தகி நடராஜன் குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சியும் நடைபெற்றன.

**27.8.95** அன்று நடைபெற்ற இரண்டாம் நாள் நிகழ்ச்சியின் பல்வேறு அரசுத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர். ஸ்ரீநாட்டியவித்யாலயா குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சியும், நெல்லை காஜா குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

**28.8.95** அன்று நடைபெற்ற மூன்றாம் நாள் நிகழ்ச்சியில் அரசுத்துறை அதிகாரிகள் பங்கேற்றனர். சென்னை ஏ. சுதா குழுவினரின் குச்சுபிடி நடனமும், நெல்லை அண்ணாதாசன் குழுவினரின் 'புவிகாக்கும் புரட்சித்தலைவி' என்னும் நாடகமும், மேலப்பாளையம் செய்யதுஅலி ரிபாய் மெல்லிசை நிகழ்ச்சியும் நடைபெற்றன.

**29.8.95** அன்று நடைபெற்ற நான்காம் நாள் நிகழ்ச்சியில்,

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் கலை நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்துப் பேருரையாற்றினார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு வி.கு. ஜெயக்கொடி, இ.ஆ.ப., அவர்கள் தலைமை ஏற்றார். நாடாளுமன்ற உறுப்பினர் திரு என். தங்கராஜபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் திரு பி. தர்மலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். தூத்துக்குடி சக்தி நாட்டியக் குழுவினரின் நடன நிகழ்ச்சியும், விஜய்விஸ்வநாத்தின் கர்நாடக இசைப் பக்திப் பாடல்கள் நிகழ்ச்சியும், திரைப்பட நடிகர் திரு கே. கண்ணன் குழுவினரின் நாடக நிகழ்ச்சியும் நடை பெற்றன.

30.8.95 அன்று நடைபெற்ற ஐந்தாம் நாள் நிகழ்ச்சியில், அரசுத்துறையைச் சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். காந்தி கிராம அறக்கட்டளை ஆசிரமக் கலை நிகழ்ச்சியும், கரிவலம் கவிஞர் ராமசாமியின் காவடிச் சிந்து நிகழ்ச்சியும், ஸ்ரீவடிவுடையம்மன் பைன் ஆர்ட்ஸ் குழுவினரின் நாடகமும் இடம் பெற்றன.

அதேபோன்று, ஆறாம் நாள் நிகழ்ச்சி நடைபெற்ற நாளான 31.8.95 அன்று, அரசுத்துறையைச் சார்ந்த பல்வேறு அதிகாரிகள் பங்கேற்றனர். கட்டபொம்மன் போக்குவரத்துக்கழகக் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சியும், மதுரை இளையநிலா குழுவினரின் நாடகமும், சென்னை நித்தியப் பரதாஞ்சலி பத்மாவின் பரதநாட்டிய நிகழ்ச்சியும் இடம்பெற்றன.

## பல்துறைப் பணி விளக்க முகாம்கள்

**தமிழக அரசின் சாதனைகள், திட்டங்கள், நலப்பணிகள் அனைத்தையும் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பகுதி மக்களும் அறியும் வண்ணம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1995 – 96 ஆம் நிதியாண்டில் புதுக்கோட்டை, காமராஜர், நீலகிரி, திருமபுரி, வட ஆர்க்காடு அம்பேத்கர், பெரியார், மதுரை, தென் ஆர்க்காடு வள்ளலார், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் ஆகிய பத்து மாவட்டங்களில் பல்துறைப் பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சியினை அமைக்க உத்தரவிட்டுள்ளார்.**

1.9.95 மற்றும் 2.9.95 ஆகிய இரண்டு நாட்கள் நிகழ்ச்சிகள் மாண்புமிகு பஞ்சாப் முதல்வரின் மறைவினையொட்டி நடத்தப்பெறவில்லை.

3.9.95 அன்று மாலை 7.00 மணியளவில் சாரல் திருவிழாவின் நிறைவு நாள் விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு வி.கு. ஜெயக்கொடி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று நிறைவு நாள் விழா சொற்பொழிவாற்றினார். திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் திரு து. சந்திரசேகரன் முன்னிலை வகித்தார். அரசு அலுவலர்கள் சிறப்புரையாற்றினார்கள். குடிசை மாற்று வாரிய செயற்பொறியாளர் திரு து. கணேசன் முன்னதாக வரவேற்றுப் பேசினார். குற்றாலம் நகராட்சி ஆணையாளர் திரு பி. தங்கமணி நன்றியுரையாற்றினார். காலை 10.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தென்மண்டலப் பண்பாட்டு மையத்தின் சார்பில், கலை நிகழ்ச்சியும், திரு இராஜ கோபாலனின் மெல்லிசை நிகழ்ச்சியும், பல்லவி கிரியேஷன் சின் 'புதிய பார்வை' நாடகமும், நேரு இளைஞர் மையத்தின் சார்பில் கிராமியக் கலை நிகழ்ச்சியும், கோவில்பட்டி நளாயினி குழுவினரின் கிராமியப் பாடல் நிகழ்ச்சியும், இந்துமதி சுபாஷினியின் பரதநாட்டியமும், திரு சுலைமான் சேட்டின் மேஜிக் ஷோ நிகழ்ச்சியும், திருமதி லெட்சுமி இராமசாமியின் 'பரதநாட்டியமும்', வாசுதேவன் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சியும், திரு ஜெய்கணேஷ் குழுவினரின் நாடகமும் இவ் விழாவில் நடத்தப்பெற்றன.

இவ்விழா மற்றும் கலை நிகழ்ச்சிகளை ஆயிரக் கணக்கான பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் கண்டு களித்தனர்.

### எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி - 1

பதிப்பாசிரியர்: டாக்டர் அன்னிதாமசு

வெளியீடு: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 600 113.

பக்கம்: 292 விலை: ரூ.47

ஆண்டுதோறும் பல்வேறு துறைகள் குறித்து நூல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை, கவிதை என்று பல்வேறு தலைப்பு களில் இலக்கியப் படைப்புகள் வெளிவருகின்றன. ஆனால், அவை குறித்த சரியான தகவல்களை எப்படிப் பெறுவது? என்கிற வினா தமிழார்வலர்களுக்கு எழுவது இயல்புதானே? அந்த வினாவுக்கு விடையாக வந்திருப்பது தான் இந்தத் தொகுப்பு நூல்.

இந்நூலில் 'திரைப்படம், திரையிசைப் பாடல், திங்கள் இதழ், மாத நாவல், குறுநாவல், சிறுகதை, இதழ்ச் சிறுகதை, வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம், மேடை நாடகம் ஆகிய பத்துத் தலைப்புகளில், அவ்வத்துறை வல்லுநர்கள் கட்டுரைகள் படைத் திருக்கிறார்கள்.

இதுபோன்ற தொகுப்புகள் வெளிவருவது, உலகம் முழுவதும் தமிழில் என்னென்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை உணர அவை துணைபுரிவதோடு, பிற்கால ஆய்வுக்கும் பயனாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

### வாசன் ஜோக்ஸ்

தொகுப்பாசிரியர்: துரை பிரிதிவிராஜ்

வெளியீடு: சாந்தா பப்ளிஷர்ஸ்




5, ஸ்ரீபுரம் 2வது தெரு சென்னை - 600 014.

பக்கம்: 316 விலை: ரூ.25

இன்பமும் துன்பமும் இரண் டறக் கலந்ததுதான் வாழ்க்கை என்றாலும், அதில் நகைச்சுவைக்கு முக்கிய இடமுண்டு. நகைச்சுவை மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. மகிழ்ச்சியாய் இருப்பது உடல் நலத்துக்கு நல்லது என்றும் கூறுவார்கள். அந்த வகையில் இந்த நூலில் ஏராளமான நகைச்சுவைத் துணுக்குகள் நிறைந்துள்ளன.

சமுதாயத்தில் பலரைச் சந்திக்கிறோம், சிந்திக்கிறோம். அத்தகையவர்களை நகைச்சுவை வடிவத்திலே இந்த நூலில் பார்க்கிறோம் - படிக்கிறோம்.

உதாரணத்துக்கு ஒன்று:

"டாக்டர் எனக்கு மூச்சுவிடக் கஷ்டமா இருக்குது!"

"கவலைப்படாதே, அதை நிறுத்திடறேன்!"

கைக்கு அடக்கமான கச்சிதமான புத்தகம். வயிறு வலிக்கச் சிரிக்கவைக்கும் சிரிப்புத் துளிகள். ஆம். அவை தேன் துளிகள்.

### உலக மகா இலக்கிய மேதைகள்

ஆசிரியர்: தங்கவயல் லோகிதாசனார்

வெளியீடு: மணி பதிப்பகம், 58. எஸ்.பி.எஸ். முதல் தெரு, சென்னை - 600 014.

பக்கம்: 248 விலை: ரூ.32

இலக்கிய மேதைகள், இருளில் வழிகாட்டும் ஒளி விளக்குகள். அந்த விளக்கின் ஒளியிலே வாழ்க்கைப் பாடங்களை நாம் படிக்கலாம்; பாதை மாறாமலும் நேர் வழி செல்லலாம். அவ்வாறு வழிகாட்டிய வரலாற்று நாயகர்களின் வாழ்க்கைக் குறிப்புகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார் நூலாசிரியர்.

ஜப்பான் நாவலாசிரியை முராஸகி ஹிகிபூ முதல் இங்கிலாந்து நாட்டின் சார்லஸ் டிக்கன்ஸ் வரை 25 இலக்கிய மேதைகள் இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றனர்.

### தமிழ் இலக்கியம் கற்க!

ஆசிரியர்: அ.கி. பரந்தாமனார்

வெளியீடு: அல்லி நிலையம் 19, முத்து முதலித் தெரு சென்னை 600 007

விலை: ரூ.13.50 பக்: 82

தமிழ் இலக்கியத்தை எப்படிக் கற்பது?

இந்த வினாவுக்கு விடையாக விளங்குகிறது இந்நூல். தொடக்கமே நூலின் முத்தாய்ப்பாக விளங்கு கின்றது, தமிழ் இலக்கியம் கற்க அடிப்படையான தமிழக வரலாறு, சமயக் குறிப்புகள், அகத்திணை, புறத்திணை விளக்கங்கள் எல்லாம் வகுத்தும் தொகுத்தும் கூறப்பட்டு உள்ளன. அத்துடன், இலக்கியம் கற்பதற்கான ஐந்தாண்டுத் திட்ட மும் தீட்டப்பட்டுள்ளன. இலக்கிய ஆர்வலர்கள் இதயத்தில் பதியத்தக்க கருத்துக்கள் பல, நூல் முழுவதும் விரவி உள்ளன.

**- பொ. மறைமலை**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகர்மான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி
HTA 7556.95

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

தமிழரசு



